

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 203 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 21 – திங்கள்கிழமை 04 மார்ச் 2024 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 203 : Thiruvalluvar Year - 2055 - Maasi 21 - Monday 04 March 2024 - Kovai ★★ 16 Pages ₹ 5.00







### இன்று (மார்ச் 4–ஆம் தேதி) கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கம் மற்றும் “எல்லோர்க்கும் எல்லாம்”

# ‘திராவிட மாடல்’ நாயகரின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டங்கள்!

## தமிழ்நாடு முழுதும் மாநகரம், நகரங்களில் நடைபெறுகிறது! தலைமைக் கழகம் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 4-**

**இன்று (மார்ச் 4ஆம் தேதி) தமிழ்நாடு முழுவதும் மாநகரம் மற்றும் நகரங்களில் “எல்லோருக்கும் எல்லாம்” “திராவிட மாடல் நாயகர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக் கூட்டங்கள்!” நடைபெறுகின்றன.**

இதுகுறித்த தலைமைக் கழக அறிவிப்பு வருமாறு :-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 23.2.2024 அன்று காணொலி காட்சி வாயிலாக “தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்” நடைபெற்றது.

இக்கூட்டத்தில் “ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரரான நம் தலைவர், கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமரவைத்த பெருமையைப் பெற்றுத்தந்துள்ளார். தந்தை பெரியாரின் சமூக நீதியையும், பேரறிஞர் அண்ணாவின் மாநிலசுயாட்சிக் கொள்கையையும், தமிழினத்தலைவர் கலைஞரின் சமூகநலத்திட்டங்களையும் மனதில் தாங்கி திராவிட மாடல் ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்கிறார் கழகத் தலைவர் அவர்கள்.

அத்தகைய பெருமைமிகு தலைவரின் பிறந்தநாளை நாம் அனைவரும் சீரியவகையில் கொண்டாடும் விதமாக திராவிடமாடல் அரசின் சாதனைகள் மற்றும் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கும் பொதுக்கூட்டங்களை தமிழ்நாடு முழுவதும் மாநகராட்சி, நகராட்சிகளில் தலைமைக் கழக அறிவிப்பின்படி நடத்திடுவது” எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானத்தின்படி, பின்வரும் விபரப்படி - மாநகரம் மற்றும்



நகரங்களில் அறிவிக்கப்பட்டுள்ள பேச்சாளர்களைக் கொண்டு, “எல்லோருக்கும் எல்லாம்” “திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டங்கள்!” நடத்திட வேண்டுமென தலைமைக் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

**நாள்: 04.03.2024 (திங்கள்கிழமை)**

| இடம் | | சிறப்புரை |
|---|---|---|
| செங்கல்பட்டு நகரம் | : | **கழகப்பொதுச் செயலாளர் துரைமுருகன்** எஸ்.ஜெகத்ரட்சகன் |
| திருநெல்வேலி மாநகரம் | : | மாண்புமிகு ஐ. பெரியசாமி |
| புகளூர் நகரம் | : | அந்தியூர் செல்வராஜ் |
| ஈரோடு மாநகரம் | : | திருமதி. கனிமொழி கருணாநிதி |
| நெய்வேலி நகரம் | : | ஆர்.எஸ்.பாரதி |
| குளச்சல் நகரம் | : | மாண்புமிகு எஸ். இரகுபதி |
| சிவகங்கை நகரம் | : | மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி |
| புதுக்கோட்டை நகரம் | : | மாண்புமிகு டி.ஆர்.பி. ராஜா |
| விழுப்புரம் நகரம் | : | டி.கே.எஸ். இளங்கோவன் |
| தாம்பரம் மாநகரம் | : | திருச்சி சிவா |
| திருப்பத்தூர் நகரம் | : | மாண்புமிகு கோவி. செழியன் |
| தேனி நகரம் | : | பொன். முத்துராமலிங்கம் |
| திருச்சி மாநகரம் | : | பேராசிரியர் சுப.வீ. |
| புதுக்கோட்டை நகரம் | : | ஜெயரஞ்சன் |
| திருச்செந்தூர் நகரம் | : | தாயகம் கவி |
| மயிலாடுதுறை நகரம் | : | ஏ.கே.எஸ். விஜயன் |
| பூவிருந்தவல்லி நகரம் | : | திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன் |
| கருமத்தம்பட்டி நகரம் | : | பவானி கண்ணன் |
| திருத்துறைப்பூண்டி நகரம் | : | குத்தாலம் பி. கல்யாணம் |
| வடலூர் நகரம் | : | திருமதி. சல்மா |
| கள்ளக்குறிச்சி நகரம் | : | நெல்லிக்குப்பம் புகழேந்தி |
| வாலாஜாபேட்டை நகரம் | : | சிவ. ஜெயராஜ் |
| தருமபுரிநகரம் | : | காசிமுத்து மாணிக்கம் |

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

### ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதற்கு - தமிழ்நாடு அரசு வலுவான சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டதற்காக

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - ஸ்டெர்லைட் போராட்டக் குழுவினர் நன்றி!

## நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

**சென்னை, மார்ச் 4-**

**ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதற்கு தமிழ்நாடு அரசு வலுவான சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டதற்காக பூவுலகின் நண்பர்கள் அமைப்பு மற்றும் ஸ்டெர்லைட் போராட்டக் குழுவினர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.**

அதன் விபரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.3.2024) முகாம் அலுவலகத்தில், பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் சுந்தரராஜன், பிரபாகரன்,

வைத்திசெல்வன், ஜியோ டாமின், பேராட்டக் குழுவைச் சார்ந்த கிருஷ்ண மூர்த்தி, திருமதி பாத்திமா பாபு, ஹரிராகவன், மகேஷ்குமார், மெரினா பிரபு, சுஜித், குணசீலன், ரீகன், ராஜா, கிதர் பிஸ்மி, அம்ஜித், திருமதி வசந்தி, சிம்லா, கோபால், வாஞ்சிநாதன், திருமதி மாரியம்மாள் ஆகியோர் சந்தித்து, “தூத்துக்குடியில் சுற்றுச்சூழலுக்கு எதிரான ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக தமிழ்நாடு அரசு முன்வைத்த வலுவான வாதங்களால், ஆலையை மூடியது சரியே என்று உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியதையொட்டியும், இந்த ஆலையை மூடுவதற்கு தமிழ்நாடு அரசு வலுவான சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டதற்காகவும் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

தூத்துக்குடியில் 22.5.2018 அன்று ஸ்டெர்லைட் தாமிர உருக்காலையை நிரந்தரமாக மூடக்கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின்போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஏற்பட்ட உயிரிழப்புகள், காயங்கள்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.3.2024) முகாம் அலுவலகத்தில், பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் சுந்தரராஜன், பிரபாகரன், வைத்திசெல்வன், ஜியோ டாமின், பேராட்டக் குழுவைச் சார்ந்த கிருஷ்ணமூர்த்தி, திருமதி பாத்திமா பாபு, ஹரிராகவன், மகேஷ்குமார், மெரினா பிரபு, சுஜித், குணசீலன், ரீகன், ராஜா, கிதர் பிஸ்மி, சிடர் பிஸ்னி, அம்ஜித், திருமதி வசந்தி, சிம்லா, கோபால், வாஞ்சிநாதன், திருமதி மாரியம்மாள் ஆகியோர் சந்தித்து, தூத்துக்குடியில் சுற்றுச் சூழலுக்கு எதிரான ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக தமிழ்நாடு அரசு முன்வைத்த வலுவான வாதங்களால், ஆலையை மூடியது சரியே என்று உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியதையொட்டியும், இந்த ஆலையை மூடுவதற்கு தமிழ்நாடு அரசு வலுவான சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டதற்காகவும் நன்றி தெரிவித்துக் கொண்டனர். இச்சந்திப்பின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி, வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு ஆகியோர் உடனிருந்தனர்.

குறித்தும், பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்தும் விசாரிப்பதற்காக தமிழ்நாடு அரசால் ஓய்வுபெற்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் அவர்களின் தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. மேலும், தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த 13 பேரின் குடும்பத்தினருக்கு கூடுதலாக தலா 5 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 65 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டதோடு, ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலை போராட்டத்தின் போது உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் கொடும் காயமடைந்தவர்கள் 17 பேருக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளையும் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

அத்துடன் ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடிட தமிழ்நாடு அரசு தொடர்ந்து சட்டப்போராட்டம் நடத்தி வந்த நிலையில், ஸ்டெர்லைட் ஆலையை மூடியது சரியே என்று உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை தற்போது அளித்துள்ளது தமிழ்நாடு அரசின் சட்டப் போராட்டத்திற்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

இச்சந்திப்பின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு ஆகியோர் உடனிருந்தனர்.



மதுரை ஆரப்பாளையம் கிராஸ் ரோட்டில் முதல்வர் பிறந்த நாள் விழா மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக் கூட்டத்தில் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. பேசினார். இதில் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், தணிக்கை குழு உறுப்பினர் வேலுச்சாமி, முன்னாள் மேயர் குழந்தை வேலு, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜெயராம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை ஆகிய வட்டங்கள் சீரமைப்பு!

# புதிய வட்டமாக திருவோணம் உதயம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, மார்ச் 4-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2022 - 2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், “தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை ஆகிய வட்டங்களைச் சீரமைத்து புதிய திருவோணம் வருவாய் வட்டம் உருவாக்கப்படும்” என்னும் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்கள்.

ஒரத்தநாடு வட்டத்திலுள்ள திருவோணம் ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள், அத்தியாவசியச் சேவைகளான சாதிச் சான்று, வருமானச் சான்று, இருப்பிடச் சான்று, வாரிசுச் சான்று, பட்டா மாற்றம் உள்ளிட்ட பல்வேறு சான்றுகளையும், வருவாய்த் துறையின் பிற சேவைகளையும் பெறுவதற்காக ஏறத்தாழ 34 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஒரத்தநாடு வட்டத்தின் தலைமையிடத்திற்கு மிகுந்த சிரமத்துடன் வந்து செல்ல வேண்டியுள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள கிராம மக்களுக்குப் பொருளாதாரச் செலவுகள் அதிகமாகின்றன. அத்துடன் இந்தச் சேவைகளைப் பெறுவதற்காக அவர்கள் நாள் முழுவதும் செலவிட்டு அலையவும் வேண்டியுள்ளது.

ஒவ்வொரு நாளும் பொது மக்களின் துயர்துடைப்பதில் மிகுந்த அக்கறை செலுத்தி வருகின்ற முதலமைச்சர் அவர்கள் திருவோணம் பகுதி மக்களின் சிரமங்கள் தம்முடைய கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து அவற்றை உடனடியாகக் களைவதற்கு முடிவு செய்தார்கள். அந்த முடிவைச் செயல்படுத்தும் விதமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை ஆகிய இரண்டு வருவாய் வட்டங்களையும் சீரமைத்து, காவாளப்பட்டி, சில்லத்தூர், திருநெல்லூர், வெங்கரை ஆகிய 4 குறு வட்டங்களையும், 45 வருவாய் கிராமங்களையும் உள்ளடக்கி திருவோணத் தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய திருவோணம் வருவாய் வட்டத்தினை உருவாக்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதற்குரிய அரசாணை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையினால் வெளியிடப்பட்டுள்ளது.



திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம் பாடியநல்லூர் விளையாட்டு திடலில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தின் கீழ் 526 ஊராட்சிகளில் 672 விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். அதுல்யா மிஸ்ரா, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபு சங்கர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கே.ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், ஆவடி சா.மு.நாசர், ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜே கோவிந்தராஜன், வி.ஜி.ராஜேந்திரன் திருத்தணி எஸ்.சந்திரன், துரை. சந்திரசேகர், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் உமா மகேஸ்வரி உள்பட அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.

### பள்ளிக் கல்வித் துறையில் செயல்படும்

# அனைத்து வகைப் பள்ளிகளின் மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் பதவிக் காலம் நீட்டிப்பு!

## அரசாணை வெளியீடு!

சென்னை, மார்ச் 4-

தமிழ்நாடு அரசுப் பள்ளிக் கல்வித்துறையின்கீழ் செயல்படும் அரசுத் தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஆகிய அனைத்து வகைப் பள்ளிகளின் சீரான செயல்பாடுகளுக்குத் துணைபுரியும் வகையில், பள்ளி மேலாண்மைக் குழுக்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு ஏப்ரல், ஜுலை மாதங்களில் திருத்தி அமைக்கப்பட்டன.

இந்த அனைத்து வகைப் பள்ளிகளின் மேலாண்மைக்குழு உறுப்பினர்களுடைய பதவிக் காலம் 2024 ஏப்ரல், மே, ஜுலை மாதங்களில் முடிவடைய உள்ளன.

2024-2025-ஆம் கல்வியாண்டில் புதிதாகச் சேரும் மாணவர்களின் பெற்றோர்களையும் உள்ளடக்கிய புதிய பள்ளி மேலாண்மைக் குழுக்களை அமைக்கும் பொருட்டு, 2022-2024 ஆம் ஆண்டிற்கான தொடக்கப் பள்ளிகளுக்கான மேலாண்மைக்குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் 1-5-2020 முதல் 10-8-2024 வரையும், நடுநிலைப் பள்ளிகளுக்கான மேலாண்மைக்கு உறுப்பினர்களின் பதவிக் காலம் 24-4-2024 முதல் 20-7-2024 வரையும், உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் மேலாண்மைக்குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் 10-7-2024 முதல் 17-8-2024 வரையும் நீட்டிக்கப்பட்டுள்ளது என்றும், இதற்குரிய அரசாணை 29-2-2024 அன்று வெளியிடப்பட்டுள்ளது என்றும் பள்ளிக் கல்வித் துறை அரசுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### திராவிட மாடல் அரசின் அழுத்தமான வாதங்களால்

# ஸ்டெர்லைட் ஆலை நிரந்தரமாக மூட உச்சநீதிமன்றம் உத்தரவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, மார்ச் 4**

**ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடிட உச்சநீதிமன்றத்தில் அழுத்தமான வாதங்களை முன்வைத்த திராவிட மாடல் அரசுக்குத் தூத்துக்குடி மக்கள் சார்பாக வந்திருந்த குழுவினர் நன்றி தெரிவித்தது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:**



சுற்றுச்சூழலுக்கும் தூத்துக்குடி மக்களின் உடல்நலனுக்கும் தீங்கு விளைவித்த ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடுவோம் எனத் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்தபடி, உச்சநீதிமன்றத்தில் அழுத்தமான வாதங்களை முன்வைத்த நமது திராவிட மாடல் அரசுக்குத் தூத்துக்குடி மக்கள் சார்பாக வந்திருந்த குழுவினர் நன்றி தெரிவித்தனர்.

அவர்கள் வைத்த மற்ற கோரிக்கைகள் பற்றி தங்கை திருமதி கனிமொழி கருணாநிதி அவர்கள் எடுத்துரைத்தார். அவற்றையும் அரசு கவனத்தில் கொண்டு பரிசீலிக்கும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### அரசு தொடக்கப் பள்ளிகளில்

# மாணவர்களைச் சேர்த்திட நடவடிக்கை எடுத்திடுவீர்!

## சார்நிலை அலுவலர்களுக்கு தொடக்கக் கல்வித்துறை வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 4-

“அரசு தொடக்கப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்த்திட நடவடிக்கை எடுத்திடுமாறு சார்நிலை அலுவலர்களுக்கு தொடக்கக் கல்வித் துறை அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து தொடக்கக் கல்வித்துறையின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித் தரம் உயரும் பொருட்டு பல்வேறு முன்னோடித் திட்டங்கள் பள்ளிக் கல்வித் துறையின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வரும் கல்வி ஆண்டில் அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் திறன் வகுப்பறைகள் (Smart Class Rooms), அனைத்து அரசு நடுநிலைப் பள்ளிகளிலும் உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள் (HITech Labs) அதற்குத் தேவையான இணையதள (Broadband Connectivity) வசதியுடன் அமைக்கப்பட உள்ளன. மேலும், அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு கையடக்கக் கணினியும் (TAB) வழங்கப்பட உள்ளது.

அரசுப் பள்ளிகளில் 2024 2025ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கையை சென்னை, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை நடுநிலைப் பள்ளியில் 01.03.2024 அன்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தொடங்கி வைத்துள்ளார்கள்.

பள்ளிகள் அமைந்துள்ள குடியிருப்புப் பகுதிகளில் (Habitation and Catchment Area) இருந்து 5+ வயதுடைய குழந்தைகளை அரசுப் பள்ளிகளில் சேர்க்கை செய்வதற்கும் அரசுப் பள்ளிகளில் கிடைக்கும் கற்றல் வாய்ப்புகள், பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பல்வேறு உதவித் தொகைகள் குறித்து அறியும் வகையில் விழிப்புணர்வு பிரச்சாரத்தினை அனைத்து பொது மக்கள் மற்றும் அனைத்து பள்ளி வயது குழந்தைகளின் பெற்றோர்கள் மத்தியில் ஏற்படுத்திடத் தேவையான நடவடிக்கைகளை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் இருபால் ஆசிரியர்கள் மேற்கொள்வதற்கு உரிய அறிவுரைகளை வட்டாரக் கல்வி அலுவலர்கள் மூலமாக வழங்கிட அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் (தொடக்கக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டில் பெரும்பான்மையான அரசுப் பள்ளிகள் ஊரகப் பகுதிகளில் தான் அமைந்து உள்ளது. ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள அங்கன்வாடி மையங்களில் 3 முதல் 5 வயதுடைய குழந்தைகள் பள்ளி முன்பருவக் கல்வியைக் கற்று வருகின்றனர்.

அங்கன்வாடி மையங்களில் கல்வி பயிலும் 5+ வயதுடைய அனைத்து குழந்தைகளையும் முழுமையாக அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பில் சேர்க்கை செய்வதற்கு வட்டாரக் கல்வி அலுவலர்கள், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் இருபால் ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள் மற்றும் சுய ஆர்வலர் களுக்கும் உரிய அறிவுரைகளை வழங்கி மாணவர் சேர்க்கைப் பணிகளை சிறந்த முறையில் நடத்திட அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப் படுகிறார்கள்.

மேலும் அங்கன்வாடி மையங்கள் அல்லாது வேறு பள்ளிகளில் இருந்து அரசுப் பள்ளிகளுக்கு சேர்க்கை ஆக விரும்பும் குழந்தைகள் மற்றும் ஒன்றாம் வகுப்பு அல்லாத பிற வகுப்புகளுக்கு சேர்க்கை ஆக விரும்பும் மாணவர்களுக்கு அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் சேர்க்கைக்கான இடங்களை பள்ளிகள் வழங்க உரிய அறிவுரைகளை வட்டாரக் கல்வி அலுவலர்கள் மூலம் அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் (தொடக்கக் கல்வி) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சியரின் ஆலோசனையின்படியும் முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி), வட்டாரக் கல்வி அலுவலர்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் மாவட்டத் திட்ட அலுவலருடன் ஒன்றிணைந்து செயல்பட்டு அங்கன்வாடி மையங்களில் இருந்து வெளிவரும் குழந்தைகளில்ஒருவர்கூட விடுபடாமல் அனைவரையும் அரசுப் பள்ளிகளில் சேர்க்கை செய்திடவும், வரும் ஆண்டில் மாணவர் சேர்க்கை விகிதத்தினை கணிசமான அளவில் உயர்த்திடவும் சார்நிலை அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் அரசுப் பள்ளிகளில் சேர்க்கை ஆகும் மாணவர் விவரங்களை கல்வித் தகவல் மேலாண்மை முறைமை (EMIS) இணையதளத்தில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு பள்ளிக்கல்வித் துறை செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.






பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்களிடம் 01.03.2024 அன்று முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு நெடுஞ்சாலை ஒப்பந்தகாரர்களின்கூட்டமைப்புசார்பாகமாநிலதலைவர்திரிசங்குதலைமையில்,கட்டுமானப்பொருட்களின்விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக் கோரி மனு அளிக்கப்பட்டது.



வருகின்ற நாடாளுமன்றத் பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட கே.என்.அருண் நேரு சென்னையில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் விருப்ப மனுவை அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதியிடம் வழங்கினார். அருகில் திருச்சி வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ. மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தர பாண்டியன், பழனியாண்டி, ஸ்டாலின் குமார் கதிரவன், குளித்தலை எம்.எல்.ஏ. மாணிக்கம், பெரம்பலூர் எம்.எல்.ஏ. பிரபாகரன், முன்னாள்எம்.எல்.ஏ. ராஜ்குமார் மற்றும் தொழிலதிபர் தேர்தலுக்காக கே என் ரவிச்சந்திரன் உள்பட பலர் உள்ளனர்.

### பேரறிஞர் அண்ணா உருவாக்கிய

# தமிழ்நாட்டில் மோடி மிரட்டல் செல்லுபடியாகாது!

## மணப்பாறையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சு!

திருச்சி, மார்ச் 4 -

திருச்சி தெற்கு மாவட்டம் மணப்பாறை தொகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவ சிலை திறப்பில் பேசிய அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிரதமர் மோடி மிரட்டினால் பயப்படுவதற்கு நாங்கள் அ.தி.மு.க. அல்ல இது அண்ணா உருவாக்கிய தி.மு.க என்பதை மறந்து விடக்கூடாது. தமிழ்நாட்டில் மோடி மிரட்டல் எல்லாம் செல்லுபடியாகாது என்று குறிப்பிட்டார்.

திருச்சி மாவட்டம், மணப்பாறை திண்டுக்கல் மெயின் சாலையில் மாட்டுச்சந்தை அருகே முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞரின் சிலை திறப்பு விழா நடைபெற்றது. பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ்



பொய்யாமொழி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கலந்து கொண்டு சிலையை திறந்து வைத்தார். முன்னதாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது, நாடாளுமன்ற தேர்தல் வர இருக்கின்றது. அதனால் தான் பிரதமர் மோடி இப்போது தான் அவ்வபோது வந்து சென்று கொண்டிருக்கிறார். புயல், வெள்ளம் தாக்கிய போது, மீனவர்கள் இறந்த போது, நீட் தேர்வால் 22 மாணவ மாணவிகள் இறந்த போது வராத மோடி ஏன் நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தில் வராத மோடி இப்படி எதற்கும் வராத மோடி, இப்போது அடிக்கடி தமிழகத்திற்கு வந்து செல்கிறார் என்றால் தேர்தல் வந்து விட்டது என்று அர்த்தம். அழிப்பேன், ஒழிப்பேன் என்று பிரதமர் சொல்கிறார். ஆனால் எங்கள் முதல்வர் எழுதிய கடிதத்தில் ஆளும் கட்சியாக இருந்த போது ஏதும் செய்யவில்லை. எதிர்க்கட்சியாக இருக்கும் போதாவது ஏதாவது செய்வீர்களாக என்று நாகரீகமாக கேட்டிருந்தார் என்று பேசினார். தொடர்ந்து பேசிய அவர் மோடி மிரட்டினால் அடிபணிய இது அ.தி.மு.க. அல்ல. அண்ணாவின் தி.மு.க. அண்ணா உருவாக்கிய தமிழ்நாடு. மோடியின் மிரட்டல் எல்லாம் இங்கு செல்லுபடியாகாது என்று கூறினார்.

கலைஞரின் சிலையை திறந்து வைத்து திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி பேசியதாவது,

இந்த தேர்தலில் இந்தியா கூட்டணி தான் வெற்றி பெறப் போகிறது. காஷ்மீர், டெல்லி, மராட்டியம், தமிழ்நாடு இப்படி இந்தியா கூட்டணி அமைந்து விட்டது. தமிழ்நாடு தான் இதற்கு வழிகாட்டுகிறது. மத்தியில் இந்தியா கூட்டணி ஆட்சி வரப்போகிறது என்று கூறினார்.

இந்நிகழ்வில் திருச்சி மாநகரக்கழகச்செயலாளர் மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சபியுல்லா, சேகரன், வண்ணை அரங்கநாதன், மாவட்ட கழக அவை தலைவர் கோவிந்தராஜ், மாவட்ட பொருளாளர் குணசேகரன், மணப்பாறை நகரக் கழகச் செயலாளர் மு.ம.செல்வம், மணப்பாறை நகர மன்ற தலைவர் கீதா மைக்கேல் ராஜ், மணப்பாறை ஒன்றிய கழகச் செயலாளர் ராமசாமி, மணப்பாறை ஒன்றிய குழு தலைவர் அமிர்தவள்ளி, மற்றும் மாவட்ட, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் திரளானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகரம், 3வது பகுதியில் இல்லம் தோறும் ஸ்டாலின் குரல் திண்ணைப் பிரச்சாரம் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, தலைமையில் வீடு, வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை விளக்கி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இதில் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, தொகுதி பார்வையாளர் வண்ணை அரங்கநாதன், மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, பகுதி செயலாளர் கல்யாணசுந்தரம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# ‘திராவிட மாடல்’ நாயகரின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டங்கள்!

## தலைமைக் கழக அறிவிப்பு!... முதல் பக்கத் தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| வால்பாறை நகரம் | : | திருமதி. சேலம் சுஜாதா |
| தாரமங்கலம் நகரம் | : | கரூர் முரளி |
| சீர்காழி நகரம் | : | திருமதி. புதுக்கோட்டை விஜயா |
| திருவில்லிப்புத்தூர் நகரம் | : | திருமதி. ஆண்டாள் பிரியதர்ஷினி |
| ஆரணி நகரம் | : | வி.பி. கலைராஜன் |
| கம்பம் நகரம் | : | வே.மதிமாறன் |
| குமாரப்பாளையம்நகரம் | : | திருமதி. ஜெ. ரேகா பிரியதர்ஷினி |
| பல்லடம் நகரம் | : | தக்கோலம் தேவபாலன் |
| காரைக்குடி நகரம் | : | சென்னை அரங்கநாதன் |
| உடுமலைப்பேட்டை நகரம் | : | கு. கருணாநிதி |
| அம்பாசமுத்திரம் நகரம் | : | மதுரை எஸ். பாலா |
| கொல்லங்கோடு நகரம் | : | திருமதி. பவானி ராஜேந்திரன் |
| ஆவடி மாநகரம் | : | திண்டுக்கல் ஐ. லியோனி |
| பவானி நகரம் | : | ஒப்பிலாமணி, பொன்னேரி சிவா |
| கடையநல்லூர் நகரம் | : | நாஞ்சில் சம்பத் |
| அரக்கோணம் நகரம் | : | தமிழன் பிரசன்னா |
| ஆத்தூர் நகரம் | : | சூர்யாவெற்றிகொண்டான் |
| இராமேஸ்வரம் நகரம் | : | சைதை சாதிக் |
| பட்டுக்கோட்டை நகரம் | : | கா.அமுதரசன் |
| திருப்பூர் மாநகரம் | : | சி.வி.எம்.பி. எழிலரசன் |
| உசிலம்பட்டி நகரம் | : | கம்பம் பெ.செல்வேந்திரன் |
| தூத்துக்குடி மாநகரம் | : | இரா. ராஜீவ்காந்தி |
| கண்டோண்மெண்ட் நகரம் | : | இ.பரந்தாமன் |
| கோட்டகுப்பம் நகரம் | : | ஆ. கிருஷ்ணசாமி |
| ஜோலார்பேட்டை நகரம் | : | சூர்யா கிருஷ்ணமூர்த்தி |
| கூடலூர்நகரம்(கோவை) | : | கோவை செல்வராஜ் |
| கூடலூர் நகரம் (நீலகிரி) | : | வி.சி.சந்திரகுமார் |
| முசிறி நகரம் | : | கடலூர் இள. புகழேந்தி |
| பள்ளப்பட்டி நகரம் | : | கவிச்சுடர் கவிதைப்பித்தன் |
| பரமக்குடி நகரம் | : | வி.பி. இராசன் |
| குழித்துறை நகரம் | : | சௌமியன் |
| குன்னூர் நகரம் | : | சித்திக் |
| பொள்ளாச்சி நகரம் | : | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |

இவ்வாறு தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ப.சீ. கிருஷ்ணசாமி

### மார்ச் 4 (2001)



பெரியார் மாவட்டக் கழக பொறுப்பாளர்களில் ஒருவராகவும், பவானி நகரக் கழக செயலாளராகவும் தொடர்ந்து 25 ஆண்டுகள் பணியாற்றியவர்.

ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவராகவும், நகர வங்கித் தலைவராகவும் பணியாற்றியவர்.

மொழிப்போர் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“உயிர் கொள்கைக்கு உடல் மண்ணிற்கு என்று நீ கொண்டிருந்த உறுதியும், எதற்கும் கலங்காத உன் உள்ளமும் என் நினைவிலிருந்து என்றைக்கும் மறையாது!” எனத் தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### எழும்பூர் தொகுதியில் கழகத் தலைவர் தளபதி பிறந்த நாள்!

# 33 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் - பரிசுப் பொருட்கள்!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஏற்பாடு!

சென்னை, மார்ச் 4 -

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி அவர்களின் 71ஆவது பிறந்த நாளைப் பொதுமக்களுக்கு உதவிடும் வகையில் கொண்டாடும் முகமாக, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர் தொகுதி, 61ஆவது வட்டம், பாந்தியன் சாலையில் அமைந்துள்ள எழும்பூர் அரசு தாய்சேய் நல மருத்துவமனையில் 01.03.2024 அன்று பிறந்த 33 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கப் பட்டன.

இந்நிகழ்விற்கு எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார் முன்னிலை வகித்தார்.

முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருஷோத்தமன், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் கலையரசன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ. மருதன்,

மாவட்டப் பிரதிநிதிகள் கமலக்கண்ணன், மா.காந்தி, எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் ரா.வெற்றிவேல், பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்துலெட்சுமி, 108வது வட்டத் துணைச் செயலாளர்கள் கே.சீனி வாசன், இந்திராணி,

முன்னாள் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் விஜயபோஸ், 108 (அ) வட்ட இளைஞரணி அணி அமைப்பாளர் சதிஷ்குமார்,

108வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ் குமார், 58 (அ) வட்ட இளைஞரணி அணி துணை அமைப்பாளர் எல்.சுகுமாரன், தேவநிதி, நாகராஜ், சூளை பன்னீர் செல்வம், புஷ்பராஜ், பாலாஜி அன்புமணி, கோமகன், பாக முகவர் கவிதா, சத்யா, வழக்கறிஞர் தர்மதுரை, கே.பி. பார்க் சதிஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.


**கோயம்புத்தூர் மாநகராட்சி**
கலைஞர் 100 1924 - 2023
பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)
ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.(e)21/2024 நாள் : 01.03.2024

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி 5 மண்டலங்களிலுள்ள வார்டு பகுதிகளுக்குட்பட்ட பழுதடைந்த சாலைகளுக்கு தார் ஒட்டுப் போடுதல் | 5 பணி | 11.03.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 12.03.2024 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 1. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 185/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 02.03.2024




திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாராபுரம் நகரம், பழைய வீட்டுவசதி வாரியக்குடியிருப்பு பகுதிகளில் இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் திண்ணைப் பிரச்சாரத்தை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் நமது கழக அரசின் சாதனைகள் மற்றும் நிதிநிலை அறிக்கையை பற்றி விளக்கி துண்டுப் பிரசுரங்களை வழங்கினார். உடன் தாராபுரம் நகரக் கழகச் செயலாளர் சு.முருகானந்தம், நகரக் கழக துணைச் செயலாளர்கள் வெ.கமலக்கண்ணன், செலின் பிலோமினா, மாவட்டப் பிரதிநிதிகள் எஸ்.எம்.யூசுப், சீனிவாசன், செந்தில்குமார் மற்றும் மாவட்ட, நகர, வார்டுக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மகளிர் வாழ்வில் மகிழ்ச்சியைத் தரும் திராவிட மாடல் அரசு ! 3

கடந்த கட்டுரையில், எப்படி எல்லாம் பாசிச பா.ஜ.க. நம்மிடம் இருந்து வரி என்ற பெயரில் பணத்தைப் பறிக்கிறது. அதனால் ஒவ்வொரு சாமானியகுடும்பத்திற்கும் ஏற்படும் இழப்புகள் என்ன என்பதைப் பற்றி விரிவாக எழுதியிருந்தேன்.

அந்தக் கட்டுரையை நிறைவு செய்யும் போது,அடுத்த கட்டுரையில் பா.ஜ.க.வினால் நமக்கு மாதம் 5000 ரூபாய் வரை இழப்பு ஏற்படுவது எவ்வளவு உண்மையோ அதே போல், திராவிட மாடல்அரசின் நாயகன் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திட்டங்களால் மாதம் 5000 ரூபாய் அளவிற்கு சாமானியக் குடும்பங்கள்சே மிக்கின்றன என்பதைச் சொல்லியிருந்தேன்.

பா.ஜ.க.வினால் ஏற்படும் பாதிப்புகளைச் சுட்டிக்காட்டும் அதே வேளையில் என்னென்ன வழிகளில் எல்லாம் திராவிட மாடல் அரசால் தமிழ்நாடு மக்கள் பலன் பெறுகிறார்கள் என்பதையும் சொல்ல வேண்டியது நம் கடமை. அக்கடமையைச் செய்கிறது இக்கட்டுரை.

பலருக்கும் மறந்திருக்கக் கூடும். இந்த அரசு பொறுப்பேற்ற போது, கொரோனா உச்சத்தில் இருந்தது. தலைநகர் டெல்லி உள்ளிட்ட பல இடங்களிலும் மக்கள் கொத்துக் கொத்தாக மாண்டு மடிந்து கொண்டிருந்தனர். அவர்களின் சடலங்களை எரிக்கக் கூட இடமின்றி சாலைகளில் சடலங்கள் அடுக்கி வைக்கப்பட்ட காட்சிகள் காண்போரை அதிர்ச்சியில் ஆழ்த்தின.

இப்படி மிக சவாலான கால கட்டத்தில், பொது முடக்கத்தால் மக்களின் வாழ்வாதாரம் முற்றிலும் நிலை குலைந்து போன சூழலில்ஆட்சிக்கட்டிலில் வந்து அமர்ந்தார் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியின் அவலங்களால் ஏற்பட்ட பொருளாதார சீர்கேடுகள் ஒருபுறம், மக்களைக் குறித்து எந்த கவலையும் படாத ஒன்றிய பா.ஜ.க. அரசு மறுபுறம், இயற்கை பேரிடராம் கொரோனா இன்





னொருபுறம் என்ற சூழலில் பதவியேற்றவர் முதல் நாள் இட்ட கையெழுத்துகளிலேயே தமிழ்நாட்டின் தலையெழுத்து மாறத் தொடங்கியது.

**கொரோனா பேரிடரால் பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு 4000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவித்திருந்ததை உத்தரவாதப்படுத்தும் விதமாக, ஆட்சிக்கு வந்த உடனேயே முதல் கட்டமாக குடும்ப அட்டைதாரர்களுக்கு 2000 ரூபாய் வழங்கப்பட்டது.**

**ஆவின் பால் லிட்டர் ஒன்றிற்கு 3 ரூபாய் குறைக்கப்பட்டது. பெண்கள் நகரப்பேருந்துகளில் கட்டணமின்றி பயணிக்கலாம் என்ற திட்டம் அமலுக்கு வந்தது.**

**கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் தனியார் மருத்துவமனைகளில் பெறும் சிகிச்சைக்கும் முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசே அவர்களுக்கான சிகிச்சைக் கட்டணத்தை ஏற்கும் உள்ளிட்ட முத்தான திட்டங்களை முதல் நாளே தொடங்கினார்.**

**ஆவின் பால் லிட்டருக்கு 3 ரூபாய் குறைக்கப்பட்டதும், பெண்கள் கட்டணமின்றி பேருந்துகளில் பயணிக்கலாம் என்பதும் பெரும் துயரில் அல்லல்பட்டுக் கொண்டிருந்த பெண்களுக்கு பெருத்த நிம்மதியைத் தந்தன.இவ்விரு திட்டங்களால் மட்டுமே மாதம் 1000 ரூபாய் அளவிற்கு சாமானியக் குடும்பப் பெண்களின் சுமை குறைந்தது.**

தொடர்ந்து, பெட்ரோலின் மீது லிட்டர் ஒன்றிற்கு 3 ரூபாயைக் குறைத்தார் நம் முதலமைச்சர். ஒரு புறம் ஈவு இரக்கமின்றி,பெட்ரோல், டீசல் மீதான வரியை மோடி அரசு அதிகப்படுத்திக் கொண்டே சென்றதால், பெரும் சிரமத்திற்கு உள்ளான மக்களுக்கு லிட்டர் பெட்ரோலுக்கு 3 ரூபாய் குறைப்பு என்பது பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. தினசரி இரு சக்கர வாகனங்களைப் பயன்படுத்துவோர் இதனால் கணிசமான பணத்தை மிச்சம் செய்ய முடிந்தது.



தமிழ்க் கேள்வி
**தி.செந்தில்வேல்**
மூத்த ஊடகவியலாளர்

இவற்றிற்கெல்லாம் மேலாக, காலை முதல் இரவு வரை வீட்டு வேலைகளைச் செய்யும் பெண்களின் உழைப்பு என்பது அங்கீகரிக்கப்படாமலேயே இருந்தது. அவர்களே கூட என்ன செய்கிறீர்கள் என்று கேட்டால், சும்மாதான் இருக்கிறோம் என்றே பதில் சொல்வார்கள். ஆனால், இல்லத்தரசிகள் செய்யும் வேலை அங்கீகரிக்கப்பட்டதே இல்லை. காரணம் அவர்கள் செய்யும் வீட்டு வேலைக்கு யாரும் ஊதியம் கொடுப்பதில்லை.

> பாசிச பா.ஜ.க. என்ற வளர்ச்சிக்கு எதிரான தடையை அகற்ற நாம் உறுதி எடுப்போம். வரும் மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. வை இந்த மண்ணில் இருந்து முற்றிலும் துடைத்தெறிவோம். ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவோம். தமிழ்நாட்டை மேலும் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்வோம். **தமிழ்நாட்டில் உதித்த சூரியன் இந்தியா முழுவதும் உதிக்கட்டும் பாசிச பா.ஜ.க. எனும் இருள் அகலட்டும்.**

**ஒரு தேசத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி என்பது அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கியதாக, அனைவருக்குமான வளர்ச்சியாக இருத்தல் அவசியம். நான் துணிந்து சொல்லுவேன், இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே இல்லத்தரசிகளின் வேலையை அங்கீகரிக்க வேண்டும் என்ற சிந்தனை ஒரே ஒரு தலைவருக்குத்தான் தோன்றியது. அவர்தான் நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.**

இல்லத்தரசிகளுக்கு மகளிர் உரிமைத் தொகையாக மாதம் 1000 ரூபாய் வழங்கி உத்தரவிட்டார் நம் முதலமைச்சர்.

**இல்லத்தரசிகளுக்கு மட்டுமா, அவர்களின் வீடுகளில் பெண் குழந்தைகள் இருந்தால், அவர்களின் உயர்கல்விக்கு மாதம் 1000 ரூபாய்தரும் புதுமைப் பெண் திட்டம், பெண் பிள்ளைகளுக்கு மட்டும்தானா ஆண் பிள்ளை களுக்கு இல்லையா என்று மாணவர்கள் உரிமையோடு கேட்ட உடன் மாணவச் செல்வங்களின் குரல்களுக்கு மதிப்பளித்து மாணவர்களுக்கும் மாதம் 1000 ரூபாய் உதவித் தொகை, என்று ஒரு குடும்பத்தில் தாய், மகள், மகன் என்று எல்லோரின் நலனிலும் அக்கறை செலுத்தும் ஒரு ஆகச்சிறந்த அரசாக நம் திராவிட மாடல் அரசை நடத்துகிறார் நம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்.**

**ஒரு ஆண் பிள்ளை, ஒரு பெண் பிள்ளை இருக்கும் வீட்டிற்கு சராசரியாக இந்த மூன்று திட்டங்களின் மூலம் மட்டுமே மாதம் 3000 ரூபாய் நம் அரசு கொடுக்கிறது. இது தவிர கட்டணமில்லா பேருந்து, பால் விலை குறைப்பு, பெட்ரோல் விலை குறைப்பு உள்ளிட்டவற்றால் ஏற்பட்ட சேமிப்புகளையும் கணக்கிட்டால் மாதம் சுமார் 5000 ரூபாய் வரை பல குடும்பங்கள் சேமிக்கும் சூழலை ஏற்படுத்தித் தந்தவர்நம் முதலமைச்சர்.**



இத்தனைக்கும் ஒன்றிய அரசு நமக்குத் தர வேண்டிய நிதியை முறையாகத் தருவதில்லை. நாம் 1 ரூபாய் ஒன்றிய அரசுக்குக் கொடுத்தால்நமக்கு 29 காசுகள் தான் திரும்பி வருகிறது. ஆளுநர் இந்த அரசுக்கு தொடர் முட்டுக்கட்டைகளைப் போடுகிறார், இத்தனை சவால்களையும்தாண்டி இத்துனை நலத்திட்டங்களை நம் முதல்வரால் செயல்படுத்த முடிகிறது எனில், இந்த தடைகள் அகற்றப்பட்டால் இன்னும் பல நலத்திட்டங்களை நம் முதல்வர் நிச்சயம் நமக்குத் தருவார்.அந்த தடைகளை அகற்ற வேண்டிய பொறுப்பு தமிழக மக்களுக்கு இருக்கிறது.

பாசிச பா.ஜ.க. என்ற வளர்ச்சிக்கு எதிரான தடையை அகற்ற நாம் உறுதி எடுப்போம். வரும் மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. வை இந்த மண்ணில் இருந்து முற்றிலும் துடைத்தெறிவோம். ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவோம். தமிழ்நாட்டை மேலும் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்வோம். **தமிழ்நாட்டில் உதித்த சூரியன் இந்தியா முழுவதும் உதிக்கட்டும் பாசிச பா.ஜ.க. எனும் இருள்அகலட்டும்.**

**தொடரும்...**



முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, விழுப்புரம் நகரம், 6 வது வார்டு, கீழ்பெரும்பாக்கம் பகுதியில் இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல் திண்ணைப் பிரச்சாரம் நிகழ்ச்சியில் கழக துணை பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி அவர்கள் கலந்து கொண்டு வீடுகளில் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க துண்டுப் பிரசுரங்களை வழங்கினார். மாவட்ட செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், நகர செயலாளர் சக்கரை, நகர்மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, துணைத் தலைவர் சித்திக் அலி மற்றும் வார்டு செயலாளர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், தேர்தல் பணி குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## மயிலாடுதுறை மாவட்டம் வருகை தரும்
# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சீர்காழியில் எழுச்சிமிகு வரவேற்பு!
## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிக்கை !

*நாகை, மார்ச் 3 -*

மயிலாடுதுறை மாவட்ட வருகை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு சீர்காழி ரயில் நிலையத்தில் மாபெரும வரவேற்பு மற்றும் மாவட்ட ஆட்சியரகம் திறப்பு விழா நிகழ்ச்சியில் மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்பீர் என மாவட்டக் கழக செலயாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்து ள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது.



கழகத்தலைவர், முதல்வர்களுக்கு எல்லாம் முதல்வர், கடைக்கோடி மக்களும் அரசின் நல திட்டங்கள் சென்று சேறும் வகையில் சிறப்பான ஆட்சி செய்து வரும் திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி அவர்கள் மயிலாடுதுறை பால்பண்ணையில் மயிலாடு துறை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கட்ட ரூ.114.48 கோடி நிதி ஒதுக்கீடு செய்து .

கட்டிடம் கட்ட தன் திருக்கரங்களால் அடிக்கல் நாட்டி அந்த கட்டத்தை ஓர் ஆண்டுக்குள் கட்டி முடிக்கப்பட்டு கட்டிடத்தை இன்று (4.4.2024) கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் தனது திருக்கரத்தால் திறந்து வைத்து, நலதிட்டங்களை வழங்கிட உள்ளார்கள்.

மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை மயிலாடுதுறை மாவட்டக் கழகம் சார்பில் நேற்று 3.3.2024 இரவு 8.30 மணிக்கு சீர்காழி ரயில் நிலையத்தில் மாபெரும் வரவேற்பு வழங்கப்பட்டது. மாவட்டக் கழகம் சார்பில் கழகத் தலைவர் அவர்களுக்கு 3ம் தேதி இரவு சீர்காழியில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. இன்று (4ம் தேதி) மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் திறப்பு விழாவில் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ள உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தை சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளு மன்ற உறுப்பினர், சட்ட மன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் கூறியுள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் அரூர் பேரூர் கழகம் சார்பில் கழகத்தலைவர் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு அரூர் பேரூர் கழக செயலாளர் முல்லைரவி ஏற்பாட்டில் அரூர் பேருந்து நிலையத்தில் கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட ஐடி விங் கு.தமிழழகன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

## நகரச் செயலாளர் வி.எல்.ஜோதி தலைமையில்
# அரக்கோணம் நகர தி.மு.க. சார்பில் கழகக் கொடியேற்றி உணவு!

*அரக்கோணம், மார்ச் 4- கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் - இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி ஆணைக்கிணங்க மாநில சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர் ஆர். வினோத் காந்தி வழிகாட்டலின்படி திராவிட மாடல் நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் - கழக தலைவர் அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு அரக்கோணம் நகர கழக செயலாளர் வி.எல் ஜோதி தலைமையில் சுவால்பேட்டை பிள்ளையார் கோயில் அருகில் கழகக் கொடி ஏற்றி, அன்னதானம், இனிப்பு, மகளிர்களுக்கு புடவை நலத்திட்ட உதவிகள் வழங்கினார். மற்றும் பழைய பேருந்து நிலையம், ஆரம்ப நகராட்சி பள்ளி, 3வது வார்டு.பழனிபேட். எஸ்.ஆர்.கேட் ஆகிய இடங்களில் அரக்கோணம் நகரத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப் பட்டது.*

*இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.கண்ணையன், முன்னாள்.மாவட்ட.துணை செயலாளர் என்.ராஜ்குமார், அரக்கோணம் நகர மன்ற தலைவர் லட்சுமி பாரி மற்றும் நகர நிர்வாகிகள் துரை சீனிவாசன் எம்.சி., கோ.வ.தமிழ்வாணன், நந்தாதேவி Mc, எஸ்.ரமேஷ்பாபு, மாவட்டப் பிரதிநிதிகள் ஆர். கே. லிங்கம், வி.பாலகிருஷ் ணன், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், எம்.கே.சிவா, எஸ். சரவணகுமார், கே.எம். பி.பாபு எம்.சி., எஸ்.பிரசாத்,எஸ்.பி.மாலின் Mc, கங்காதரன் Mc, டி.அன்பு, எல்.எழில், டி. அந்தோணி, ஜி.ஆனந்தன், நெப்போலியன், எம். கே.செந்தில்குமார், எ.கே. பாரி கமலாகண்ணன், பி. அர்ஜுனன்,எஸ்.பிரகாஷ் Mc, சங்கீதாபாண்டியன் Mc, சி.சந்தானம், நகர அமைப்பாளர்கள், துணை அமைப்பா ளர்கள், கழக வழக்கறிஞர் அணி, நகர மகளிர் அணியினர் நகர தகவல் தொழில் நுட்ப அணி, கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆர்.ஏ.துரைசாமி
**மார்ச் 4 (1978)**



**நாகை நகர செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**மிசா காலத்தில் நாகை நகரமே வியக்கத்தக்க வகையில் "அண்ணா சிலை" அமைத்து தலைவர் கலைஞர் அவர்கள் திருக்கரங்களால் திறக்கச் செய்தவர்.**

**நாகை வீட்டு வசதி சங்கத் தலைவராகவும், நீலாயதாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் அன்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


இன்று (4.3.2024)
மயிலாடுதுறையில்
மாவட்ட ஆட்சியர்
அலுவலகத்தை
திறந்து வைக்க
வருகை தரும்
ARASU ARTS
சமுகநீதியின் பாதுகாவலர்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே வருக. வருக..
அன்புடன்
எ.வ.வேலு
பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர்


04.03.2024, திங்கட்கிழமை
நாகை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை
மற்றும் நாகை மாவட்ட மக்களுக்கு
நலத்திட்ட உதவிகள் வழங்க மயிலாடுதுறைக்கு வருகை தரும்
டெல்டாவின்
காவலனே
ஆரூர் சோழனின்
மறு வடிவே...!
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
தலைவர் தளபதி
அவர்களே வருக! வருக!
அன்புடன்... எஸ்.ரகுபதி B.Sc., BL.,
சட்டத்துறை அமைச்சர்,
மாவட்ட கழக செயலாளர்-புதுக்கோட்டை (தெ)
என்.கௌதமன்
மாவட்ட கழக செயலாளர்-நாகப்பட்டினம்
தலைவர் - தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகம்
புதுகை-நாகை மாவட்ட தி.மு.க




தஞ்சை மத்திய மாவட்ட மாநகர தி.மு.க சார்பில் "இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல்", கழகத் தலைவரின் 71வது பிறந்த நாள், கழக ஆட்சியில், தமிழ்நாடு அரசின் 3 ஆண்டு சதனை, 2024 நிதி நிலை அறிக்கை விளக்கி நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி., தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, எம்.இராமசந்திரன், து.செல்வம், மாநகரச் செயலாளர் – மேயர் சண்.இராமநாதன், ஆகியோர் உள்ளனர்.

### ஈரோடு தெற்கு மாவட்டத்தில் - முதல்வர் பிறந்தநாள் - அரசின் சாதனை-

# நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம்: கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை

ஈரோடு, பிப்.4-

ஈரோடு தெற்கு மாவட்டத்தில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்தநாள் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் இன்று நடைபெறுகிறது. இதில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார் என்று மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்துள்ளார்.



இது குறித்து ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்த நாளை நாம் அனைவரும் சீரிய வகையில் கொண்டாடும் விதமாக திராவிட மாடல் அரசின் சாதனைகள் மற்றும் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கும் வகையில் எல்லோருக்கும் எல்லாம்" என்ற பொதுக்கூட்டம் இன்று (04.03.2024 திங்கட்கிழமை) மாலை 05.00 மணியளவில் ஈரோடு காளை மாட்டு சிலை, சிம்னி ஹோட்டல் அருகில் நடைபெறவுள்ளது.

இதில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

எனவே, இந்நிகழ்ச்சியில் ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத்தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### வட்டச் செயலாளர் ஆர்.மஞ்சுநாதன் தலைமையில்

# தாம்பரம் மாநகரம் 61-வது வட்டத்தில் உணவு வழங்கல்!

### எஸ்.சேகர் – ஆர்.எஸ்.சங்கர் வழங்கினர்!

தாம்பரம், மார்ச் 4-

தாம்பரம் மாநகரம் பீர்க்கன்காரணை 61வது வட்டம் சார்பாக திராவிட அரசர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71-வது பிறந்த நாள் நிகழ்ச்சி வட்டச் செயலாளர் ஆர்.மஞ்சுநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பெருங்களத்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் எஸ்.சேகர், லயன் ஆர்.எஸ்.சங்கர், தாம்பரம் ஆதிமாறன் ஆகியோர் கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு -அறுசுவை உணவு வழங்கினர்.

இதில் வட்டக் கழக நிர்வாகிகள் கே.ரவி, ஏ.முகமது ஹெரீப், ஆர்.சிவகுமார், கே.சாமுண்டீஸ்வரி, ஆர்.தீபன் சக்கரவர்த்தி, எஸ்.தனசேகர், ஏ.திருநாவுக்கரசு, எஸ்.மனோகர், ஓ.சுகந்தி, ஆர்.கதிரவன், ஆர்.தினகரன், எஸ்.மணிகண்டன், வி.ராஜகோபால், வி. கண்ணன், வி. கொளஞ்சியப்பன், ஜெ. திருப்பதி, எஸ்.தினேஷ்ராஜ், ஈ.சுப்பிரமணி, ஜெ.பி. செல்வகணேஷ், ஞானபிரகாசம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### +2 மற்றும் 10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு நடைபெறும் நிலையில்

# மின்தடை ஏற்படாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 4-

சென்னை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலகத்தில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில், எதிர்வரும் கோடை காலத்தின் போது தமிழ்நாடு முழுவதும் சீரான மின்சார விநியோகம் வழங்குவது குறித்து அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்களுடன் நடைபெற்றது.

**காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வுக் கூட்டம்**

இந்த ஆய்வுக் கூட்டத்தில், வரக்கூடிய கோடைக் காலத்தில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த மின்சார தேவை குறித்தும் அதனை எவ்வித சிரமமின்றி பூர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்.

மேற்கண்ட ஆய்வின் போது, அமைச்சர் தமிழ்நாட்டில் அனல், புனல், காற்றாலை, சூரிய மின்சக்தி மற்றும் எரிவாயு மின் உற்பத்தி நிலையங்களின் மூலமாக உற்பத்தி செய்யப்படும் மொத்த மின்சாரத்தின் அளவு குறித்து கேட்டறிந்தார்.

மாநிலத்தின் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாத உச்ச பட்ச மின் தேவை முறையே 17,035 மெகா வாட் மற்றும் 17,690 மெகா வாட் எட்டிய நிலையில், இந்த உச்ச பட்ச மின் தேவையானது எவ்வித மின் தடையுமின்றி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு மின் தேவையுடன் இதனை ஒப்பிடும் போது, முறையே இது சுமார் 11.1% மற்றும் 9% கூடுதலாகும். இதே போன்று, மார்ச் மற்றும் ஏப்ரல் மாத உச்ச பட்ச மின் தேவை முறையே 18,000 மெகாவாட் மற்றும் 19,900 மெகாவாட் வரை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மின் தேவையினை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மின் உற்பத்தி மூலம் 13,999 மெகா வாட் மற்றும் 15,093 மெகா வாட் பூர்த்தி செய்யப்படுகிறது. மீதமுள்ள மின் தேவையை மார்ச் மாதம் 3,571 மெகா வாட் மற்றும் ஏப்ரல் 4,321 மெகாவாட் மின்சாரத்தினை வெளி மின்சந்தை, மின் பரிமாற்றம் மற்றும் குறுகிய கால ஒப்பந்தம் மூலம் பெறப்பட்டுள்ளது. இதன் மூலம், நம் மாநிலத்தின் கோடைக்கால மின் தேவையை முழுமையாக எந்த வித பற்றாக்குறையும் இல்லாமல் பூர்த்தி செய்யப்படும்.

மேலும், கோடைக்காலத்தில், மின் கட்டமைப்பில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை போர்க்கால அடிப்படையில் சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், மின் பராமரிப்பு பணிகளுக்கான 2,32,896 மின் கம்பங்கள், 17,918 மின் மாற்றிகள் மற்றும் 12,500 கி. மீ. மின் கம்பிகள் உள்ளிட்ட முக்கிய தளவாட பொருட்கள் தயார் நிலையில் உள்ளது என அமைச்சரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில், +2 மற்றும் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு தொடங்கி உள்ள நிலையில், தேர்வு காலம் முடியும் வரை தமிழ்நாடு முழுவதும் உள்ள துணை மின் நிலையங்களில் மாதாந்திர பராமரிப்புக்கான மின் நிறுத்தம் ஏதும் மேற்கொள்ள வேண்டாம் என அனைத்து தலைமை பொறியாளர்களுக்கும் அறிவுறுத்தினார்.

மேலும், மின் பகிர்மான வட்டங்களில் 30 நிமிடங்களுக்கு மேல் மின் தடங்கல் ஏற்பட்ட நிகழ்வுகள் குறித்தும், அதற்கான காரணங்கள் குறித்தும் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் அமைச்சர் கேட்டறிந்து, தொடர்ச்சியாக மின் தடங்கல் ஏற்படும் இடங்களில் சிறப்பு கவனம் செலுத்தி அதற்கான காரணத்தை கண்டறிந்து உடனடியாக சரிசெய்வதற்கும், அனைத்து அலுவலர்களுக்கும் உத்தரவிட்டார். மேலும், மின்னகம் மூலம் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறும், பொதுமக்கள் அனைவருக்கும் தடையில்லா, சீரான மின்சாரம் தொடர்ந்து கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார். முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நம் மாநிலத்திற்குத் தேவைப்படும் மின்சாரத்தின் மொத்த தேவையினை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை கிழக்கு மாவட்ட

# தொழிலாளர் அணி சார்பில் நல உதவிகள்!

சென்னை, மார்ச் 4-

சென்னை கிழக்கு மாவட்ட தொழிலாளர் அணி சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 500 சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று (3.3.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு, தாதா முத்தியப்பன் தெரு, ஆச்சாரப்பன் தெரு சந்திப்பு, கொத்தவால் சாவடியில் நடைற்றது. சென்னை கிழக்கு மாவட்ட தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் எல்.சம்பத்குமார் தலைமை வகித்தார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், எம்.விஜய குமார், ஜி. எம்.தேவன், பி. ஸ்ரீராமுலு, ஆர்.வரதன், எம்.ஷேக் அப்துல்லா, ஆர்.கலைச்செல்வி எம்.இப்ராஹிம் கனி, ராஜேஷ் ஜெயின், பி.விஜயகுமார், எம்.விநாயகம், பா.பிரதீப்குமார், பா.ஜெகதீஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆ.சு.அசோக்குமார், ஸ்டன்ட் புஷ்பா ஆர்.ஆறுமுகம், வி.ராஜமாணிக்கம் ச.ஜெயக்குமார், கே.ரமேஷ், மா.முத்து, வே.ராமு, எஸ்.ரமேஷ் பாபு கே.பிரகாசம், துரை கணேஷ், ஏ.என்.ஆர்.செந்தில்குமார், எஸ்.ஜெகன், அ.ஆதம் கிறிஸ்வர் பாரி, கொளத்தூர் கே.கங்காதரன் ஆகியோர் வரவேற்றனர்.

இதில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் 500 சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். ஜி.ராமமூர்த்தி நன்றி கூறினார்.






மயிலாடுதுறை புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத் திறப்பு விழா

மற்றும்

மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களின் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல், நிறைவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்தல் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்

புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தைத் திறந்து வைத்து,
புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து மற்றும்
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப் பேருரையாற்றுவார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் பங்கேற்றுச் சிறப்பிப்பார்கள்.

நாள் : 4.3.2024, திங்கட்கிழமை, காலை 10.00 மணி
இடம் : மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம், மன்னம்பந்தல், மயிலாடுதுறை

சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப.,
தலைமைச் செயலாளர்



ரூ.114.48 கோடியில் தரைத்தளம் மற்றும் 7 தளங்களுடன் 82,883.9 சதுர அடி பரப்பளவில் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்.



நாகப்பட்டினம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி.

செ.ம.தொ.இ./341/வரைகலை/2024

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009



04.03.2024 திங்கட்கிழமை
மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரகம் திறக்கவும்
பல்வேறு நலத்திட்ட உதவிகள்
வழங்க வருகை தரும்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களை
வணங்கி வரவேற்கிறோம்!
சிவ.வீ.மெய்யநாதன்
சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர்
நிவேதா எம்.முருகன் M.L.A.,
மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர்
செ.இராமலிங்கம்
மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர்
வரவில் மகிழும்....
மு.பன்னீர்செல்வம், எம்.ஏ., பி.எல்.,
தலைமை செயற்குழு உறுப்பினர், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர்
GS Designs 98432 19951



மயிலாடுதுறை
மாவட்ட ஆட்சியர்
அலுவலகம்
திறப்பு விழா மற்றும்
நலத்திட்ட உதவிகள்
வழங்கும் விழா
நாள் : 04.03.2024 திங்கள்
வருகைதரும்
ஒப்பற்ற தலைவர் – மாண்புமிகு
முதல்வர்
அவர்களே! வருக! வருக!!
சிவ.வீ.மெய்யநாதன் M.C.A.,
சுற்றுச்சூழல் மற்றும்
காலநிலை மாற்றத்துறை அமைச்சர்
நிவேதா.எம்.முருகன் MLA.,
மாவட்ட கழக செயலாளர்
சட்டமன்ற உறுப்பினர்-பூம்புகார் தொகுதி
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க


நாள் : 04.03.2024 திங்கள்
மயிலாடுதுறை
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
திறப்பு விழா மற்றும்
நலத்திட்ட உதவிகள்
வழங்கும் விழாவிற்கு
வருகைதரும்
திராவிட மாடல் நாயகரே!
முதல்வர்களில்
முதல்வரே!
மாண்புமிகு.
எ.வ.வேலு
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்,
பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்
மாண்புமிகு.
அன்பில் மகேஷ் பொய்யாமொழி M.C.A.,
பள்ளி கல்வித்துறை அமைச்சர்
மாண்புமிகு.
முனைவர். டி.ஆர்.பி.ராஜா
தொழில்துறை அமைச்சர், செயலாளர் - தகவல் தொழில்நுட்ப அணி
மாண்புமிகு.
சிவ.வீ.மெய்யநாதன் M.C.A.,
சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர்
திருமிகு.
நிவேதா.எம்.முருகன் MLA.,
மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர்
அனைவரையும் வருக! வருக!! என
அன்புடன் வரவேற்கும்.
பி.எம்.ஸ்ரீதர் B.Sc.,
மண்டல பொறுப்பாளர்
தஞ்சை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி
DMK IT WING
தஞ்சை மண்டல தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி


நாள் : 04.03.2024 திங்கள்
மயிலாடுதுறை
மாவட்ட ஆட்சியர்
அலுவலகம்
திறப்பு விழா மற்றும்
நலத்திட்ட உதவிகள்
வழங்கும் விழாவிற்கு
வருகைதரும்
தமிழ்நாட்டின்
தலைமகனே!
வருக! வருக!!
சிவ.வீ.மெய்யநாதன் M.C.A.,
சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர்
நிவேதா.எம்.முருகன் MLA.,
மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர்
மு.ஞானவேலன்
மாவட்ட துணைச் செயலாளர்
பி.எம்.ஸ்ரீதர்
மண்டல.த.தொ.நு.அ.பொறுப்பாளர்
பி.எம்.அன்பழகன்
ஒன்றிய கழக செயலாளர்,செம்பை வடக்கு
எம்.அப்துல்மாலிக்
ஒன்றிய கழக செயலாளர், செம்பை தெற்கு
அமிர்தவிஜயகுமார்
ஒன்றிய கழக செயலாளர், செம்பை மத்தியம்
நந்தினி ஸ்ரீதர்
ஒன்றிய பெருந்தலைவர், செம்பை.
செம்பனார்கோவில் ஒன்றிய தி.மு.க


04.03.2024
மயிலாடுதுறை
மாவட்டத்தில்
ரூ.114.48 இலட்சத்தில்
மாவட்ட ஆட்சியர்
அலுவலகம் திறப்பு விழா
மற்றும் பல்வேறு
அரசு நலத்திட்ட
பணிகளை
துவக்கி வைக்க
வருகை தரும்
ARASU ARTS
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே வருக! வருக!!
நிவேதா எம்.முருகன்
மயிலாடுதுறை மாவட்ட செயலாளர்
அன்புடன் : சிவ.வீ.மெய்யநாதன் M.C.A.,
சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்

# இருக்கின்றார் கலைஞர்; என்றென்றும் தலைவர்!



தொண்டர்க்குத் தொண்டராய்
வாளுக்கு வாளாக
வாகையைப் பெற்றவர்!
நினைவிடம் உலகெங்கும்
நிரம்பவே உண்டெனினும்
தனைவென்ற கலைஞர்க்குத்
தமிழ்மரபாய் எழுப்பியுள்ள
மனைபோன்ற நினைவிடம்
மாண்புகள் நிறைவிடம்
புனைவுகள் எல்லாமே
புகன்றிடும் வரலாறு
தினையளவே, கலைஞரின்
செந்தழல் வாழ்க்கையோ
பனையளவு, மலையளவு;
பகர்வதோ பருக்கைதான்!

கலைஞர்க்கோர் நினைவிடம்;
கடும்உழைப்பு நிறைவிடம்!
தலைவர்க்கோர்
உறைவிடம்;
தமிழோசை உலவிடும்!
கலைகட்கோர் இருப்பிடம்,
கவினான கடலோரம்!
அலைகளோ வந்துவந்து
அடிதொட்டுப் புகழ்கூறும்;
வலைப்படா மீன்களோ
வாழ்த்திடத் துள்ளியெழும்;
தொலைவிலே சூரியன்
சுடர்க்கைகள் நீட்டிவரும்!

கலையெழில் பறவைகள்
களித்தொலி எழுப்பிடும்!
நிலையான பொன்மணல்
நேயமாய் நெருங்கிடும்!

மலைமீறி மேகங்கள்
மணிக்குடை பிடித்திடும்;
விலைமதிப்பு இல்லாமல்
விளங்குகிற முத்துகள்
இலைஉமக்கு ஈடென
எங்கெங்கும் இரைந்திருக்கும்!
சிலையான உமக்கிவை
சிறப்பெனினும் தமிழரின்
தலைமகன் அண்ணாவின்
தாள்மலர் அருகுறங்கும்
நிலையெவர்க்குக் கிட்டுமிங்கே?
நீள்வான்கை கொட்டுமன்றோ!
தண்பொழிலில் குயில்பாடும்
தமிழ்நகராம் திருவாரூர்
மண்ணிலே சிறந்ததென
மகிழ்ந்துரைக்கும்
மரபுண்டு;
விண்ணிலே ஒளிர்ந்திருந்த
விழுமிய சுடரொன்று
கண்ணிலே காட்சிதரக்
கலைஞர்எனப் பிறந்ததனால்
எண்ணிலாப் பெருமையென
இயம்புதலே ஏற்கின்ற
உண்மையாம்; ஊரோடு
நாட்டிற்கும்
ஒவ்வுமெனப்
பண்களை இசைக்கலாம்;
பகுத்தறிவில் களிக்கலாம்!

தேரோடும் திருவாரூர்
தெருக்களிலே நீர்அன்று
ஈரோடும் காஞ்சியும்
எழுப்பிய உணர்ச்சியில்
போராடும் இளைஞனாய்ப்
புறப்பட்ட நாள்முதல்
நீரோடும் காவிரிபோல்
நில்லாமல் இறுதிவரை
ஊரோடு மொழி,இன
உரிமையை அடைவதற்கு
யாரோடும் போராட
எழுந்தவர் அல்லவோ?

வேரோடும் கழகத்தின்
விழுதாகி மரமாகிப்
பேரோடும் புகழோடும்
பெருமிதமாய்த் திகழ்ந்தபின்னும்
போராடும் உணர்வுதான்
பொங்கியே வாழ்ந்தவரே!

நீராடும் கடலோரம்
நீள்துயில் அண்ணாவின்
சீராடும் திருவடிகள்
சேர்ந்திட வேண்டுமென்று
நேராடும் நீதிமன்ற
நிலைஆணை பெற்றபின்தான்
ஏராடும் கடற்கரையில்
இருக்கின்றீர் இறவாமல்!

தலையெடுப்பேன் என்றொரு
தறுதலை சொன்னபோது
சிலையுடைக்க மார்பினைச்
சிறுபயல் சிதைத்தபோது
உலையாக நெஞ்சங்கள்
ஊரெல்லாம் கொதித்தாலும்
கலக்கமே இல்லாமல்
கடுஞ்சினம் கொள்ளாமல்
இலக்கியம் புகன்றவர்நீர்!
இடுகின்றான் மார்பிலே
நிலைமாறிக் குத்துகள்;
நெஞ்சுக்கு முத்துகள்!
இலைகளின் சலசலப்பும்
எதிரிகள் பளபளப்பும்
குலைந்திடும் விரைவிலெனும்
கொள்கையில் உறுதியாய்
மலையாக நின்றவர்நீர்;
மாற்றாரை வென்றவர்நீர்!

தலையறுப்பேன் எனுந்தடியர்
தடமின்றிப் போயினர்;
இலையாகிக் காய்ந்தனர்;
ஏதிலராய் மாய்ந்தனர்;
தலைகொடுப்பேன் என்றநீர்
சரித்திரம் ஆயினீர்!
கொலைகாரக் கும்பல்தான்
கூடாத பழிசுமத்திக்
கலகங்கள் விளைத்தாலும்
கறைபூசிக் களித்தாலும்
உலகந்தான் நம்பவில்லை;
உளறும்பொய் வெல்லவில்லை!

பேராசிரியர்
**மா.செல்வராசன்**

குலவுகின்ற தென்றல்நீர்!
கொதித்தெழுந்தால் தீயும்நீர்;
இலகுகின்ற கடலும்நீர்;
இமயமாம் மலையும்நீர்;
உலவுகின்ற நிலமும் நீர்;
ஒப்பற்ற தஞ்சைநீர்;
அலகிட்டுப் பார்க்கவும்
ஆகாத வானம்நீர்!

நெடுங்காலம் தமிழ்நாட்டை
நீர்மையாய் ஆண்டவர்நீர்!
விடுங்காலம் உயிர்,உமது
விழுமியம் புரியாமல்
கொடுக்க இடம் மறுத்தாலும்
குறுமனம் கொண்டாலும்
தடுக்கத்தான் முயன்றாலும்
தகவின்றி நடந்தாலும்
எடுக்கத்தான் குறையாத
இன்அமுத சுரபிபோல்
உடுக்கத்தான் உண்ணத்தான்
உறங்கத்தான்
உழைக்கத்தான்
நெடுகத்தான் நீர்ஆண்டு
நிரம்பத்தான் வழங்கினீர்
ஒடுக்கத்தான் பட்டவர்க்கும்,
ஒதுக்கித்தான் விட்டவர்க்கும்?

கெடுக்கத்தான் பார்த்திருந்த
கீழ்மனம் கொண்டவரை
முடக்கத்தான் நீதிமன்றம்
முன்வந்து தீர்ப்பிலே
அடுக்காது இதுவென்றும்
அண்ணாவின் அருகிலிடம்
கொடுக்கத்தான்
வேண்டுமென்றும்
கூறிய பின்னரே
படுக்கத்தான் போனவர்நீர்;
பகுத்தறிவு மானவர்நீர்!

ஆட்சியில் இருந்துநீர்
ஆற்றிய செயல்களுக்குச்
சாட்சியும் வேண்டுமோ?
தமிழ்நாட்டின் ஒவ்வொரு
மாட்சியும் உம்மாலே
மலர்ந்தது கூறுமே!
நீட்சியும் வந்தது;
நிகரற்றீர் என்றுலகம்
காட்சியும் தருகிறது;
காலமும் வளர்கிறது!

கேளுங்கள் தமிழரே!
கீழ்க்கதிர் அண்ணா,பின்
ஆளுங்கள் என்றவர்க்கு
அரசாட்சி தந்தீர்கள்!
தோளுக்குத் தோளாக,

முனைவோர்க்கே வெற்றியென
முழங்கிய கலைஞரை
நினைவோர்க்குக் காலம்பொன்,
கடமைகண் என்பது
வினையாற்றல் மாந்தர்க்கு
வேண்டுமென விளம்புவதாம் !

முனைமுறியா வேல்போல
முப்போதும் எழுதுகோல்
தனைக்கொண்டு எழுதியவர்
தமிழ்கொண்ட வழுதியவர்!
சுனையாற்று நீர்போலச்
சுவையாக, சுடராக
வனைந்தவர்; வளர்ந்தவர்!
கனைகுரல சிவாஜியால்
கனல்பெற்ற உரையாடல்
நினைத்தாலே உணர்ச்சிதான்
நெஞ்சிலே பாயுமே!
முனைந்தாலும் எழுதுதற்கு
முடியாது வேறொருவர்;
தினந்தோறும் மடலெழுதும்
திறனுளார் யாரொருவர்?

எத்தனையோ நினைவிடங்கள்
எழிற்சிலைகள் எழுப்பிய
முத்துவேலர் செல்வனுக்கு
முதல்வராய்த் தளபதி
தத்துகடல் அலைபாடத்
தலைமகன் அண்ணனுடன்
சித்தங்கள் உவகையுறச்
சிலிர்ப்பூட்டும் நினைவிடம்
வித்தகமாய் நிறுவியே
விழாக்காட்சி ஆக்கியுள்ளார்;
நித்தமங்குச் செல்பவர்க்கு
நெஞ்சிலெழும் எண்ணங்கள்
புத்தகமாய் அறிவூட்டும்;
புதிதென்றும் அழகூட்டும்!

கலைஞரே, தமக்கொரு
கங்கைகொண்ட சோழன்போல்
தலைமைக்கு ஏற்றமகன்
தளபதி முதல்வர்தாம்
கலையெழில் மேவிடும்
கருத்துலகம் ஒன்றினை
நிலையாக விளங்கிட
நிறுவிய மாட்சிதான்
உலகெலாம் பரவிடும்;
ஒப்பற்ற திருவிடம்!

உதிக்கின்ற சூரியன்
உயிரூட்டும் ஒளிபடக்
குதித்தெழும் கடல்அலைகள்
கோவென்று கொண்டாடக்
கதியான அண்ணாவும்
கலைஞரும் ஓய்வுறும்
புதிதான நினைவிடங்கள்,
புத்துலகப் புனைவிடங்கள்!
நிதியாகப் போற்றுவோம்;
நெஞ்சிலே ஏற்றுவோம்!

ஓலங்கள் உமக்கெதிராய்
ஒன்றிரண்டை எழுப்புவோர்
ஏலங்கள் போனவர்கள்,
ஏவலுக்குப் படிந்தவர்கள்;
கூளங்கள், அவைகளோ
கொத்தடிமைக் கூலிகள்;
தாளங்கள் போடுவோர்,
தப்பாமல் ஆடுவோர்
நீளங்கள் மக்கள்தாம்
நிரம்பவே அறிவார்கள்!

கோலங்கள், நீர்கொண்ட
கொள்கைகள் மக்களுக்குப்
பாலங்கள், எப்போதும்
பயன்தரும் பாடங்கள்!
காலங்கள் மறைந்தாலும்
கலைஞரே, தலைவரே!
நீலவான்போல் நீர்என்றும்
நீளுவீர்; நிலையாவீர்!



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளராக நியமனம் செய்யப்பட்ட வீ.ஜெகதீசன் சென்னையில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது மேனாள் ஒன்றிய அமைச்சர் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார் ஆகியோர் உள்ளனர்.

### ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில்

## வேலூர் சட்டமன்றத் தொகுதி ஆலோசனைக் கூட்டம்!

வேலூர், மார்ச் 4-

வேலூர் சட்டமன்ற தொகுதி சார்பில் தொகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள் பி. எல் .ஏ .2 முகவர்கள் மற்றும் பிஎல். எல். சி உறுப்பினர்கள் ஆகியோரின் ஆலோசனைக் கூட்டம் பேபி மஹாலில் நடந்தது.

கூட்டத்துக்கு மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, தலைமை தாங்கினார். மாவட்ட அவைத் தலைவர் தி.அ. முகமது சகி, நாடாளு மன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த், தொகுதி மேற்பார்வையாளர் ஜெயக்குமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார்கள்.

கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா, நம்மையெல்லாம் உருவாக்கிய முத்தமிழ் அறிஞர் தமிழின தலைவர் கலைஞர் ஆகியோர்களின் ஒட்டுமொத்த உருவமாகவும் குரலாகவும் இருந்து நம்மிடையே வாழ்ந்து கொண்டு, தமிழ் சமுதாயம், தமிழ் கலாச்சாரம் தமிழ் பண்பாடு உயர சமத்துவம், சகோதரத்துவம், மத சார்பின்மை என அனைத்தும் அனைவருக்கும்கிடைத்திட இரவு பகல் பாராமல் பணியாற்றி தமிழக அரசிற்கும், கழகத்திற்கும் தலைமை ஏற்று நடத்தி வரும் குறிஞ்சி மலர் நாயகன், திராவிட மாடல், அரசின் பேரரசர், நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற தமிழ்நாடு முதல்வரும் கழகத்தின் தலைவருமான தளபதியார் அவர்களின் பிறந்த நாள் மார்ச் 1. அன்றைய தினமே நமக்கெல்லாம் எழுச்சி நாள். 71ஆவது பிறந்தநாள் காணும் கழகத் தலைவர் பல்லாண்டு காலம் வாழ வேலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் மாநகர தி.மு.க. சார்பில் நெஞ்சார்ந்த பிறந்தநாள் வாழ்த்துகள் தெரிவித்துக்கொள்வதோடு பிறந்த நாளை முன்னிட்டு தொகுதிக்குட்பட்ட 36 வட்டக் கழகங்களிலும் கழக இருவண்ணகொடியேற்றி நலத்திட்ட உதவிகள் மற்றும் இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை நோக்கி இல்லம் தோறும் தலைவரின் குரல் என்ற பரப்புரையை மேற்கொள்ள வேண்டும் என கழகத் தலைவர் கேட்டுக்கொண்டதற்கு, இணங்க வேலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 243 பூத்துகளில் உள்ள வாக்காளர்களை எல்லாம் தேடி நேரில் சந்தித்து, பரப்புரை மேற்கொள்வது எனவும், இப்பணியில் மாநகர கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் மாநில அணிகளின் நிர்வாகிகள் வட்டக் கழக, நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதி நிதிகள், அணிகளின் நிர்வாகிகள், குறிப்பாக பாக முகவர்கள் என அழைக்கப்படும் பி. எல். ஏ. அவர்களோடு பாகத்திற்கு 10 பேர் என நியமிக்க பட்டிருக்கும் பி.எல். சி ஆகியோர்கள் ஒருங்கிணைந்து நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு பூத்துக்களிலும் 50 வீடுகள் என கணக்கீடு செய்து கழக அரசின் திட்டங்களை எடுத்துரைத்து துண்டு பிரசுரம் வழங்கி திண்ணை பரப்புரை மேற்கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

வங்கக்கடலோரம் மறைந்து மறையாமலும் துயில் கொண்டிருக்கும் இந்த இயக்கத்தினை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தை புதுப்பொலி வுடன் புதுப்பித்தும் தமிழ் சமுதாயம் மேன்மை அடைய அடித்தட்டு விளிம்பில் உள்ள மக்களும் பயன்பெறும் வகையில் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதல்வராக இருந்து பல்வேறு திட்டங்களை தீட்டி நல்லாட்சி மேற்கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர், அவர்களின் நினைவிடத்தை உருவாக்கி இந்திய அரசியல் வரலாற்றில் இன்னும் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் தலைவர் கலைஞரின் புகழ் நிலைத்திருக்கும் வகையில் அவர் செய்திருக்கும், சாதனைகளை நம் கண் முன்னே நிறுத்தி நினைவகத்தில் அருங்காட்சியகம் மற்றும் நூலகம் அமைத்து தந்து, திறந்து வைத்த தமிழ் நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கும் தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர் கழகத்தின் பொதுச் செயலாளர் துரை முருகன் அவர்களுக்கும் நினைவிட பணிகளை மேற்கொண்ட பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர்களுக்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

விரைவில் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் அவர்களால், நம்மிடையே ஒப்படைக்கப்படும் வேட்பாளருக்கு கழகத்தின் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்தில் கழக அரசின் சாதனைகளை எடுத்து கூறி, இரவு பகல் பாராமல் பணியாற்றி வாக்குகளை சேகரிப்பது, எனவும் பாராளு மன்ற தொகுதிக்கு உட்பட்ட சட்ட மன்ற தொகுதிகளில் வேலூர் சட்ட மன்றத் தொகுதி அதிக வாக்குகளை பெற்று தந்தது என்ற, பெருமையை உருவாக்கி, தரும் வகையில் மாநகர கழக நிர்வாகி கள், பகுதி கழக நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பி னர்கள் மாநில அணிகளின் நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் குறிப்பாக பாக முகவர்கள் என அழைக்கப்படும் பிஎல்ஏ-2 அவர்களோடு பாகத்திற்கு பத்து பேர் என நியமிக்கப் பட்டிருக்கும் பி.எல்.சி ஆகியோர்கள், ஒருங்கிணைந்து தேர்தல் பணியினை இன்று முதல் மேற்கொள்வதென கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

ஆண்டுதோறும் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ரமலான் பண்டிகை கொண்டாடும் ஏழைஎளிய இஸ்லாமிய பெருமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது, வழக்கம்போல் இந்தாண்டு ரமலான் பண்டிகையின் காலங்களில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட வாய்ப்பு உள்ளதால், மார்ச் முதல் வாரத்தில் இஸ்லாமிய பெருமக்கள் 5071 நபர்களுக்கு பிரியாணிக்குத் தேவையான பொருட்களும் இறைச்சி, வாங்கிக் கொள்ள ரூ.200 வழங்கப் பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பு செய்யுமாறு இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### இன்று (4ம் தேதி) சிவகங்கையில் முதல்வர் பிறந்த நாள் -

## அரசின் நிதி நிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம்!

### அமைச்சர்கள் கேஆர்.பெரியகருப்பன் - அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரை!

சிவகங்கை, மார்ச் 3-

தமிழகம் முழுவதும் கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாளும் கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டங்கள் மூன்று நாட்கள் நடைபெற்று வருகின்றது. இதில் இன்று (4ம் தேதி) சிவ கங்கை நகர் கழகத்தின் சார்பில் மாலை 6 மணி அளவில் சண்முகராஜா கலையரங்கில் நகர் கழகச் செயலாளர் சி.எம்.துரை ஆனந்த் தலைமையில். நடைபெறுகின்ற பொதுக்கூட்டத்தில் சிவ கங்கை மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ. கே.முருகவேல் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இந்த கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள். பொதுக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை நகர்கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த் தலைமையில் நகர் கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.



கழகத் தலைவர், திராவிட மாடல் நாயகர், தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க "எல்லோருக்கும் எல்லாம்" என்ற தலைப்பில் திராவிட மாடல் நாயகரின் 71 வது பிறந்தநாளை முன்னிட்டு 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட – நகர திமுக சார்பில், நடைபெற்றது. கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் பேறறிஞர் அண்ணா சிலை அருகில் நடைபெற்ற கூட்டத்தில் நகர செயலாளர் எஸ்.கே.நவாப் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் பரிதா நவாப் வரவேற்புரை ஆற்றினார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் ,கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர், மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர், முன்னாள் அமைச்சர் டாக்டர் விஜய் , கழக மாநில வர்த்தக அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம், அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இக்கூட்டத்தில் காஞ்சனா கமலநாதன் , வெற்றிச்செல்வன் , மணிமேகலை நாகராஜ் , நாகராஜ், டேம் வெங்கடேசன் , கோவிந்தசாமி, சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி , கதிரவன், செந்தில், கிருபாகரன் , பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன் ,அஸ்லாம், நாகராசன் , கோதண்டன் , சித்ரா சந்திரசேகர் மற்றும் அன்பரசன் கே.வி.எஸ். சீனிவாசன் , அமீர்சுகேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## சிறுபான்மையினருக்கு

# தி.மு.கழகமும், தி.மு.க. அரசும் என்றும் பாதுகாப்பு அரணாக நிற்கும்!

## கிறித்துவ சமூக பொருளாதாரக் கூட்டமைப்பு நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, மார்ச் 4–**

**சிறுபான்மையினருக்கு தி.மு. கழகமும், தி.மு.க. அரசும் என்றும் பாதுகாப்பாக இருக்கும் என்று கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கிறித்துவ சமூகப் பொருளாதாரக் கூட்டமைப்பு நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

அவரது உரை வருமாறு:

தமிழ்நாட்டில் உள்ள கிறித்துவ சமூகத்திலிருந்து வந்திருக்கும் மிக முக்கியமான பெருமக்கள் மத்தியில் உரையாடுவது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

மிக முக்கியமான நேரத்தில் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. இதற்கு ஏற்பாடு செய்தவர்களுக்கும், இதில் என்னை பங்கேற்கச் செய்த பால்வளத்துறை அமைச்சர் அண்ணன் மனோ தங்கராஜ் அவர்களுக்கும் என்னுடைய நன்றி.

தொழிற்துறை, கல்வி, மருத்துவம், சமூக நலன் என எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், அதில் தமிழ்நாட்டில் உள்ள கிறித்துவ சமூகத்தினரின் பங்களிப்பு மிகவும் அளப்பரியது.

எதற்காக இந்த மண்ணில் சமத்துவமும் – சமூக நீதியும் இருக்கணும்னு திராவிட இயக்கம் பாடுபட்டதோ, அதே விஷயங்களுக்காகத் தான் கிறிஸ்தவ அமைப்புகளும் பாடுபட்டன.

**கல்விக் கூடங்கள் பெருமளவில் திறப்பு!**

பல்லாயிரம் ஆண்டுகளாக, குறிப்பிட்ட சமூகத்தினர் மட்டும்தான் கல்வி கற்க வேண்டும். மற்றவர்கள் கல்வி கற்கக் கூடாது என்று ஒரு கூட்டம் சொல்லியது. அந்தச் சமயத்தில், எல்லாருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்று, கிறித்துவ மிஷனரிக்கள் பல கல்விக்கூடங்களைத் திறந்துவிட்டார்கள்.








100, 150 ஆண்டுகளுக்கு முன்பு, தொடங்கப்பட்ட அந்தக் கிறித்துவக் கல்விக் கூடங்கள் பல இன்றும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

நானுமே கூட எனது பள்ளிப் படிப்பை எழும்பூர் டான் பாஸ்கோ பள்ளியிலும், லயோலா கல்லூரியில் எனது பட்டப் படிப்பையும் படித்தேன். நான் மட்டுமல்ல. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சென்னைக் கிறித்துவக் கல்லூரி மேல்நிலைப் பள்ளியில தான் படித்தார். அவர் படித்த மாநிலக் கல்லூரியை, பிரிட்டிஷார் காலத்தில் கிறித்துவ அதிகாரிகள்தான் உருவாக்கினார்கள்.

**வாழ்நாள் அங்கீகாரம்!**

படிப்பைத் தாண்டி, நல்ல ஆங்கில அறிவு, பொது அறிவு, அரசியல் அறிவு, நல் ஒழுக்கம் போன்றவற்றையும் கிறித்துவக் கல்வி நிறுவனங்கள் அன்று போலவே இன்றும் சிறப்பாகக் கற்றுக் கொடுக்கின்றன.

கிறித்துவக் கல்வி நிலையங்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகமும், தி.மு.க. அரசும் எப்போதும் தூணாக இருந்து ஆதரவு அளித்து வருகிறது. சமீபத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிலையங்களுக்கு வாழ்நாள் அங்கீகாரம் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

மேலும், கிராமப் பகுதிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான சிறுபான்மையின பள்ளிகளுக்கும், முதலமைச்சரின் காலை சிற்றுண்டித் திட்டத்தை நமது முதலமைச்சர் அவர்கள் விரிவாக்கம் செய்துள்ளார். இதுவரை இந்தத் திட்டத்தில் சுமார் 17 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வந்தனர். இப்போது இந்த விரிவாக்கத்துக்குப் பிறகு, இன்னும் பல சிறுபான்மை குழந்தைகள் பயனடைவார்கள்.

ஆனால் அதே நேரத்தில், ஒன்றிய அரசு, சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் படிக்கின்ற மாணவர்களுக்கான 'போஸ்ட் மெட்ரிக் உதவித் தொகையை' நிறுத்தி வைத்துள்ளது.

கல்வி மட்டுமில்லாமல், மருத்துவம், தொழிற்துறையிலும் கிறித்துவ மக்கள் இன்று பல உயரங்களைத் தொட்டு வருகிறீர்கள்.

கிறித்துவப் பெருமக்கள் நடத்துகிற பல இலவச மருத்துவமனைகள், சத்தமில்லாமல் மக்களுக்குச் சேவை செய்துகொண்டு வருகின்றன. மதத்தின் பெயராலும், கலாச்சாரத்தின் பெயராலும் தடுப்பூசிகளுக்கு எதிர்ப்பு வந்தபோது, தடுப்பூசிகள் குறித்த விழிப்புணர்வை கிறித்துவ மருத்துவ நிறுவனங்கள்தான் ஏற்படுத்தின. அதனால்தான், கொரோனா வந்தபோது கூட அதற்கான தடுப்பூசிகளை மக்களிடம் கொண்டு போய் எளிதில் சேர்க்க முடிந்தது.

**கிறித்துவ கல்வி நிலையங்களில் பங்களிப்பு!**

மருத்துவக் கல்வியில் கிறித்துவக் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. தமிழ்நாட்டில் 'நீட்' தேர்வை ஒன்றிய அரசு கொண்டு வர முயற்சி செய்தபோது, அதை எதிர்த்து முதலில் உச்ச நீதிமன்றம் சென்றது வேலூர் கிறித்துவ மருத்துவக்கல்லூரி நிர்வாகம்தான்.

அதே போல தொழிற்துறையிலும் பல கிறித்துவ தொழில்முனைவோர்கள் எண்ணற்ற சாதனைகளைப் படைத்து வருகிறார்கள். இன்று திருச்சி செயின்ட் ஜோசப், பாளையங்கோட்டை செயின்ட் சேவியர்ஸ் போன்ற கல்வி நிலையங்களில் படித்த பலர் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் தொழில் அதிபர்களாக வளர்ந்து வருகிறார்கள்.

நாம் இன்று ஒரு முக்கியமான காலகட்டத்தில் இருக்கிறோம். இன்னும் சில நாட்களில் தேர்தல் வரவுள்ளது. இது ஏதோ தேர்தலுக்காகச் சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம். இந்தியாவுக்காகவும், இந்தியாவின் பன்முகத்தன்மையைக் காப்பாற்றுவதற்காகவும் சொல்கிறேன்.

ஒரே நாடு - ஒரே மதம் - ஒரே மொழி - ஒரே உணவு என்று போய்க் கொண்டிருக்கும் பாசிஸ்ட்டுகளுக்கு முடிவு கட்ட வேண்டும்.

**பா.ஜ.க. ஆட்சிக்கு வருவதை தடுத்து நிறுத்த வேண்டும்!**

இப்போது வரவுள்ள தேர்தலை ஏதோ, இன்னுமொரு தேர்தல் என்று நாம் கடந்து போக முடியாது. இன்னொருமுறை ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், மணிப்பூரிலும் காஷ்மீரிலும் நடந்தவை இந்தியா முழுக்க நடந்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அதை நாம் தடுத்து நிறுத்த வேண்டும்.

தேர்தலில் நிறைய கிறித்துவ வேட்பாளர்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள், கிறித்துவக் கல்வி நிறுவனங்களில் 'திறன் மேம்பாட்டுப் படிப்புகள்' வழங்கப்பட வேண்டும் என்று என்னிடம் நீங்கள் பல கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறீர்கள். அவை அனைத்தையும் நிச்சயமாக நமது முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சென்று, அவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பேன் என்று கூறிக் கொள்கிறேன்.

2021 சட்டமன்றத் தேர்தலிலேயே, கிறித்துவ நல்லெண்ண இயக்கத்தின் சகோதரர் இனிகோ இருதயராஜ் அவர்களுக்கு, தலைவர் அவர்கள் வாய்ப்பு கொடுத்தார்கள். ஏற்கெனவே தி.மு.க.வில் அமைச்சர்களாகவும், எம்.எல்.ஏ.க்களாகவும் கிறித்துவர்கள் இருக்கிறார்கள். எனவே, நிச்சயம் உங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

சிறுபான்மை மக்களுக்கு அன்றைக்கும் இன்றைக்கும் என்றைக்கும் பாதுகாப்பு அரணாக தி.மு.கழகம் நிற்கும். இதுவரை எப்படி தி.மு. கழகத்துக்கும், தி.மு.க. அரசுக்கும் நீங்கள் ஆதரவு தந்தீர்களோ, அதே போல இந்த முறையும் தர வேண்டும் என்று அன்போடும் உரிமையோடும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியாவை மீட்க, அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ், பங்குத்தந்தை வின்சென்ட் சின்னதுரை, சாம் பால் தினகரன், இந்துஸ்தான் கல்விக் குழும இயக்குநர் ஆன்னி ஜேக்கப், குளோபல் லாஜிஸ்டிக்ஸ் சொல்யூஷன்ஸ் நிறுவனர் நவீன் பிரகாஷ், கவனென்ட் குழும முதன்மை செயல் அலுவலர் ஜோஷுவா மதன், சத்தியம் தொலைக்காட்சியின் ஜசக் லிவிங்ஸ்டன் மற்றும் கிறித்துவ சமூக, பொருளாதார மையத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## பதிவுத் துறையில் ஆவணம் தாக்கல் செய்பவரின் பெயரை

# மேம்படுத்தப்பட்ட காட்சிக் கருவி மூலம் அறிவிக்கும் வசதி!

## வணிக வரி - பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார்!

*சென்னை, மார்ச் 4-*

*பதிவுத்துறையில் ஆவணம் தாக்கல் செய்பவரின் பெயர் மற்றும் டோக்கன் எண் ஆகியவற்றை மேம்படுத்தப்பட்ட காட்சிக்கருவி (Token number Display Unit) மூலம் காண்பித்து, அறிவிக்கும் வசதி ரூ.3.64 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதியை நேற்று முன்தினம் (01.03.2024) சென்னை அண்ணாசாலையில் உள்ள தியாகராய நகர் சார் பதிவாளர் அலுவலகத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார்கள்.*

*2021 - 22ம் ஆண்டு சட்டப்பேரவை கூட்டத் தொடரில் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவிற்காக கூட்டமாக வரும் பொதுமக்களின் வருகையை முறைப்படுத்தும் நோக்கில் "அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் பொருத்தப்பட்டுள்ள அடையாள வில்லை காட்சிக்கருவியில் தற்போது டோக்கன் எண் மட்டுமே காட்சிப்படுத்தப்படுவதால் ஆவணதாரர்கள் தங்கள் வரிசைக்கிரம முன்னுரிமையை அறிந்து கொள்வதில் குழப்பம் நிலவுகிறது என்பதால். இதனைத் தவிர்க்கும் வகையில் ஆவணதாரர்களின் பெயரும் காட்சிப்படுத்தப்படும் வகையிலான மேம்படுத்தப்பட்ட காட்சிக்கருவிகள் (Token Display Unit) அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் பொருத்தப்படும்." என்று வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.*

*மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து ஆவணப் பதிவில் வரிசைக்கிரமத்தை விடுதலின்றியும் வெளிப்படையாகவும் உறுதி செய்வதற்காக டோக்கன் எண்ணோடு ஒவ்வொரு பதிவுடனும் தொடர்புடைய நபரை பெயர் சொல்லி அழைக்கும் வகையில் இந்த வசதியானது ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான மொத்த செலவு ரூபாய் 3,63,95,508/ ஆகும்.*

*இந்த மேம்படுத்தப்பட்ட காட்சிக்கருவிகள் ஆவணம் தாக்கல் செய்பவர் பெயர், டோக்கன் எண் ஆகியவற்றை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் காட்சிப்படுத்தப்பட்டு அறிவிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆவணம் செய்ய இருப்பவரின் பெயரும், டோக்கன் எண்ணும் ஒரே சமயத்தில் அறிவிக்கப்படும் போது திரையில் அடுத்த இரண்டு வில்லைகளின் விபரங்களும் காட்சிப் படுத்தப்படும்.*

*பதிவுக்கு வரும் பொதுமக்கள் தங்கள் டோக்கன் எண் எப்போது வரும் என்பதை பதைபதைப்புடன் எதிர்நோக்கி காத்திராமல், இந்த புதிய வசதியின் மூலம் தங்கள் பெயரும், டோக்கன் எண்ணும் காட்சிக்கருவியில் காண்பிக்கப்பட்டு பெயர் சொல்லி அழைக்கப்பட்டவுடன் அலுவலகத்திற்குள் பதட்டமின்றி சென்று, எளிமையாக பதிவு செய்து கொள்ளலாம்.*

*இந்நிகழ்ச்சியில் வணிக வரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி ஈரோடு தெற்கு மாவட்ட கழக மகளிர் தொண்டரணி சார்பில் ஈரோடு வெண்டிபாளையத்தில் உள்ள உதவும் கரங்கள் குழந்தைகள் காப்பகத்தில் மாவட்ட அமைப்பாளர் பேபி லோகநாதன் தலைமையில் மேயர் நாகரத்தினம், சுப்பிரமணியம் நல உதவிகளை வழங்கினர். நிகழ்வில் பகுதி செயலாளர் அக்னி சந்துரு. மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி, கனிமொழி, லீலா, மகேஸ்வரி, நாகரத்தினம், மாமன்ற உறுப்பினர்கள் குணசேகரன், தண்டபாணி, மண்டல குழு தலைவர் சசிகுமார் அயூப், கே.சந்திரசேகர், இளமுருகு, மாவட்ட மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஜானகி, கோகிலா, செல்வி, சிவமதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






திராவிட இயக்க தீரர்

நினைவு நாள்

மிசா.என்.இராமசாமி

19 வது வட்ட மேனாள் செயலாளர், தஞ்சை மாநகரம்

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவின் கொள்கை பற்றாளர்

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர்தலைவர் கலைஞர்

மறைந்த செயல்வீரர் அண்ணன் S.நடராஜன் Ex MLA., அவர்கள் வழியில் நின்று

கழக பணி புரிந்த செயல் வீரரே! தடம் மாறா கழக தொண்டரே!

வாழ்நாள் இறுதி வரை கழக பணி செய்த கடமை மறவா செயல் வீரரே!!

இரண்டாம் ஆண்டு நினைவு நாளில் தங்களை போற்றி வணங்குகிறோம்.

தோற்றம்: 01.01.1947

மறைவு: 04.03.2022

என்றும் நீங்காத நினைவுகளுடன்

இரா.அன்பழகன் B.A., B.L., அஞ்சுகம்(எ) இரா.பிரபா B.B.A., D.pharm.,

தஞ்சை மத்திய மாவட்ட வழக்கறிஞரணி .

S.பிரபாகரன் என்.தெய்வநாயகம் D.செங்குட்டுவன் B.Sc., D.பாரி B.Com.,

P.K.K. மலர் வணிகம்- தஞ்சை மேனாள். தஞ்சை மாநகர 19 வது வட்ட திமுக செயலாளர்



திருச்சி மாவட்டம், மணப்பாறை திண்டுக்கல் மெயின் சாலையில் மாட்டுச்சந்தை அருகே முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞரின் சிலை திறப்பு விழா நடைபெற்றது. பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திராவிடர் கழகத் தலைவர் வீரமணி கலந்து கொண்டு சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் திருச்சி மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சபியுல்லா, சேகரன், வண்ணை அரங்கநாதன், மாவட்ட கழக அவை தலைவர் கோவிந்தராஜ், மாவட்ட பொருளாளர் குணசேகரன், மணப்பாறை நகரக் கழகச் செயலாளர் மு.ம.செல்வம், மணப்பாறை நகர மன்ற தலைவர் கீதா மைக்கேல் ராஜ், மணப்பாறை ஒன்றிய கழகச் செயலாளர் ராமசாமி, மணப்பாறை ஒன்றிய குழு தலைவர் அமிர்தவள்ளி, மற்றும் மாவட்ட, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் திரளானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தர்மபுரி நகர தி.மு.க. சார்பில் நகரை ஊர்வலமாக வந்து அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து பின் காந்தி சிலை முன்பு நடைபெற்ற நிகழ்ச்சியில் 100 வயது மூதாட்டிக்கு இனிப்பு மற்றும் நலத்திட்ட உதவிகளை நகரச் செயலாளர் நாட்டான் மாது வழங்கினார். உடன் மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி, நகராட்சி தலைவர் லட்சுமி நாட்டான் மாது, நகர துணை செயலாளர் முல்லைவேந்தன், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் மே.அன்பழகன் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### இந்த நிதியாண்டில் – பிப்ரவரி மாதத்தில் மட்டும்

# பதிவுத் துறை வரலாற்றில் ரூ.1812 கோடி வருவாய் பெற்று புதிய சாதனை!

## பதிவுத் துறை அரசு செயலாளர் தகவல்!

*சென்னை, மார்ச் 4 -*

2023- 24ஆம் நிதி யாண்டில் இந்த வருடம் பிப்ரவரி, 2024 மாதத்தில் மட்டும் ரூ.1,812.70 கோடி வருவாயை பதிவுத்துறை ஈட்டியுள்ளது. சென்ற நிதியாண்டில் பிப்ரவரி, 2023ல் அடைந்த வருவாய் ரூ.1,593.95 கோடியை விட இது ரூ.218.74 கோடி அதிகமாகும்.

இந்த நிதியாண்டில் பிப்ரவரி, 2024 முடிய மொத்தம் ரூ.16,653.32 கோடி வருவாய் பதிவுத்துறையால் ஈட்டப்பட்டுள்ளது. இது சென்ற நிதியாண்டில் பிப்ரவரி, 2023 வரை அடைந்த வருவாய் ரூ.15,481.72 கோடியை விட ரூ.1171.60 கோடி (7.57%) அதிகமாகும்.

ஜியோ கோஆர்டினேட்ஸ் உடன்கூடிய புகைப்படத்தை கிரைய ஆவணத்துடன் இணைத்து ஆவணப்பதிவு மேற்கொள்ளும் நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளதால் கட்டட மதிப்பிற்கான முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக்கட்டணம் செலுத்துவதை தவிர்க்கும் நோக்கில் கட்டடங்களை மறைத்து ஆவணம் பதிவு செய்வது தடுக்கப்பட்டுள்ளது. இதனால் கட்டடங்களின் மதிப்புக்கான உரிய முத்தி ரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் அரசுக்கு செலுத்தப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

முதலீடுகளின் வளர்ச்சி, தனிநபர் வருவாய் பெருக்கம் ஆகியவற்றின் காரணமாக பதிவுத்துறையில் இதை விடவும் கூடுதலான வருவாய் இந்த நிதியாண்டில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கடந்த டிசம்பர் மாதம் சென்னை மற்றும் தென்மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக மனைகளின் விற்பனை பாதிக்கப்பட்டுள்ளது. வெள்ளநீர் ஒரு சில நாட்களில் வடிந்துவிட்ட போதிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் மனைகளை வாங்க பொதுமக்கள் தயங்குவதால் மனைகளின் ஆவணப்பதிவு குறைந்துள்ளது. இதனால் கூடுதலாக எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வராமல் போனது. இந்நிலையிலும் பதிவுத்துறை கடந்த ஆண்டில் இதே பிப்ரவரி மாதம் வரையிலான கால கட்டத்தில் ஈட்டிய ரூ.15,481.72 கோடியை விட கூடுதலாக ரூ.1171.60 கோடி அதாவது ரூ.16653.32 கோடி வருவாயை ஈட்டியுள்ளது இது வரை எய்தப்பட்ட அதிக வசூல் சாதனையாகும்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா, கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் முன்பு கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் பொதுமக்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் இனிப்புகள் வழங்கி பட்டாசுகள் வெடித்து கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வுக்கு கோவை மாநகர மாவட்ட தி.மு.க. வழக்கறிஞரணி அமைப்பாளர் அன்புச்செழியன் தலைமை தாங்கினார். இந்த நிகழ்ச்சியில் தி.மு.க. மாநில சட்டத்துறை இணைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, அரசு குற்றவியல் வழக்கறிஞர் வி.ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினர். வழக்கறிஞர்கள் அணி நிர்வாகிகள், மருதுபாண்டியன், மணிவேல், விக்ரம், சலாவுதீன், ஆசைத்தம்பி,எலிசபெத் ராணி மற்றும் அரசு வழக்கறிஞர்கள் சிவக்குமார்,கணேசன், கண்ணன், ராஜப்பிரியா,கழக மூத்த வழக்கறிஞர்கள் ஜி.டி. ராஜேந்திரன், என்.கனகராஜ்,எஸ்.ரவிச்சந்திரன், தமிழ்ச்செல்வி, எஸ்.சந்திரமோகன் உள்பட 200க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றியம் அப்பம்பட்டு ஊராட்சியில் இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் திண்ணைப் பிரச்சாரத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

# 169 அ வட்டத்தில் அறுசுவை உணவு!

*சென்னை, மார்ச் 4 -*

தமிழக முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பரமணி யன் அவர்களின் வழிகாட்டுதலின் படி சைதை கிழக்கு பகுதி 169(அ) வட்டத்தில் பேன்பேட்டை தாடண்டர் நகர் அரசுப் பண்னை ஜோதிம்மாள் நகர் மசூதி தோட்டம் அப்பாவுநகர் சுப்பு பிள்ளை தோட்டம் காந்திபுரம் மாடல்ஹட் மன்ட் ரோடு ஆகிய பகுதிகளில்தலைமை பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார் கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் உணவு வழங்கினார்!

இந்நிகழ்வில் மாவட்ட கழக உறுப்பினர்கள் வட்ட கழகநிர்வாகிகள்அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.





23-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

4.3.2024

பவானி கிட்டு (எ)
ப.சீ.கிருட்டினசாமி

முன்னாள் நகர கழக செயலாளர்,தலைமை செயற்குழு உறுப்பினர், பவானி நகர திமுக

சு.முத்துசாமி
வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர்

என்.நல்லசிவம் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர்

மனைவி - K.ராஜம்மாள்
தம்பி - ப.சீ.நாகராசன் பவானி நகர கழக செயலாளர்
மனைவி - N.சந்திரா நாகராசன்
மகன் - K.செங்குட்டுவன் B.E., மருமகள் - S.ரங்கநாயகி B.sc.,
மகன்-N.இளங்கோ B.E., மருமகள் - E.சிந்தூரி B.E., /M.C.
பவானி நகர மன்ற தலைவர்
பேத்தி - S.வாசுகி B.Tech., மதிவாணன் USA,
பேரன்கள் - S.கிருஷ்ணராஜ், E.S.கிருத்திக், E.S.நித்விக்

இளைஞரணி மற்றும் சார்பு அணிகள்
பவானி நகர திமுக, ஈரோடு மாவட்டம்
உதயம் நண்பர்கள் குழு, பவானி


கலைஞர்
100
1924 - 2023
DMK
IT WING
4.3.2024
மயிலாடுதுறை
மாவட்டத்திற்கு
வருகை தரும்...
திராவிட
நாயகன்
அவர்களே
வருக வருக!!
டி.ஆர்.பி.ராஜா Ph.D.,
மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர்
தமிழ்நாடு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர்
மின்னும் மன்னை






## திராவிட மாடல் அரசு

58

# ஊரெல்லாம் விளையாட உன்னதத் திட்டம்!

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

*‘நன்னடை நல்கல் வேந்தருக்குக் கடனே!’* என்ற சங்கப் பாடல் வரி ஒன்று உண்டு. அதாவது, தனது நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு நல்ல முறையில் போர்ப் பயிற்சி வழங்குவது, அந்த நாட்டின் அரசனுடைய கடமை என்பது இதன் பொருள்.

2000-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 2000-2001-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை முன்வைத்து சட்டமன்றத்தில் முத்தமிழிறஞர் கலைஞர் ஆற்றிய உரையின்போது, மேற்கண்ட வரியை மேற்கோள் காட்டி, “இளைஞர்களை ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுத்திடவும், சிதறிக் கிடக்கும் அவர்கள் ஆற்றலைத் திரட்டிடவும், அவர்களை மன உறுதி படைத்தவர்களாகவும், எதிர்கால வாழ்வை நம்பிக்கையோடு எதிர்கொள்பவர்களாகவும் உருவாக்கும் பெரும் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு, ‘இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு’க்கெனத் தனித்துறையை நிறுவிட முடிவு செய்யப்பட்டுள்ளது” என்றார். தொடர்ந்து மார்ச் 28 அன்று விளையாட்டுக்கெனத் தனித்துறை உருவாக்கப்பட்டது.

கலைஞரின் அந்தக் கனவை நனவாக்க, அவரது நூற்றாண்டில், நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் மூலம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் ‘டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம்’ எனும் புதிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது.

நமது விளையாட்டுத் துறை, வெள்ளி விழாவைக் கொண்டாட இருக்கும் நேரத்தில், அந்தத் துறையை உருவாக்கிய கலைஞரின் பெயரில், ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவது... காலப் பொருத்தம்.. சாலப் பொருத்தம்..!

### ‘விளையாட்டுத் தலைநகரம்’ எனும் பயணம்!

கல்வி, மருத்துவம், தொழிற்துறை எனப் பல துறைகளில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. அதேபோல விளையாட்டுத் துறையிலும் முன்னணியில் இருக்க வேண்டும், தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரமாக்க வேண்டும் என்ற இலக்குடன் நமது ‘திராவிட மாடல் அரசு’ செயல்பட்டு வருகிறது. அந்தப் பயணத்தில் இதுவரை ‘செஸ் ஒலிம்பியாட்’ முதற்கொண்டு ‘கேலோ இந்தியா இளையோர் போட்டிகள்’ வரை பல தேசிய, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை, தமிழ்நாட்டில் நடத்தி உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறோம்.

‘அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி’ என்பதுதான் திராவிட மாடல். அதை விளையாட்டுத் துறையிலும் நம் கழக அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. அதன் அடிப்படையில்தான் மாணவர்கள் முதல் முதியோர்கள் வரை, எல்லா வயதினரும் கலந்துகொண்ட முதலமைச்சர் கோப்பைப் போட்டிகளை நடத்தினோம். மாற்றுத் திறனாளிகளுக்கும் ஊக்கத் தொகைகள் வழங்கி, அவர்களின் திறமைகளையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளோம்.

### கிராமப்புற திறமைகளைப் பட்டை தீட்ட...

இதன் அடுத்தக் கட்டமாக, விளையாட்டுத் திறமைகளை நகரத்தை மையப்படுத்தியே இருக்காமல், கிராமப்புறங்களிலும் உள்ள திறமைகளை நாம் அடையாளம் கண்டு வருகிறோம். அந்தத் திறமைகளைப் பட்டை தீட்ட, மாவட்டங்களில் சிறந்த விளையாட்டு மைதானம், பயிற்சி மையங்கள், உடற்பயிற்சிக் கூடங்கள், பயிற்சியாளர்கள் நியமனம் போன்றவற்றை விளையாட்டுத் துறை மேற்கொண்டு வருகிறது.

இவற்றின் அடுத்தப் பாய்ச்சலாக, மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் ’கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம்’ கொண்டு வரப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் 12,620 கிராம ஊராட்சிகள் உள்ளன. இந்த ஊராட்சிகளுக்கு 86 கோடி ரூபாய் செலவில் 33 விதமான விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக, மதுரையில் உள்ள ஊராட்சிகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கி, இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப் பட்டது. அடுத்து கோவை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் வழங்கப்பட்டுள்ளன.

### வெற்றிக்கு வழிகாட்டு நெறிமுறைகள்

ஒரு திட்டத்தை அறிவித்துவிட்டு, பெயருக்கு அதைத் தொடங்கி வைத்துவிட்டுச் செல்லும் கட்சி அல்ல நமது கழக ஆட்சி. அறிவிக்கப்படும் ஒவ்வொரு திட்டமும் முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்று கண்காணிக்கும். இந்தத் திட்டத்தையும் வெற்றிகரமாகச் செயல்படுத்த, வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

அதன்படி, இந்த விளையாட்டு உபகரணங்களைப் பராமரிக்க, மாவட்ட அளவிலான விளையாட்டுக் கண்காணிப்புக் குழு மற்றும் ஊராட்சி விளையாட்டு மன்றம் ஆகியவை அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் உள்ள இளைஞர்கள் தங்களை இந்தக் குழுக்களில் உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பிறகு, விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்திவிட்டு, மீண்டும் முறையாக ஒப்படைக்க வேண்டும்.

இந்த உபகரணங்கள் முறையாகப் பராமரிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க, ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சி செயலர், கிராம நிர்வாக அலுவலர், குறிப்பிட்ட ஊராட்சியில் அமைந்துள்ள அரசுப் பள்ளிகளின் தலைமையாசிரியர், அந்தப் பள்ளியின் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர், மகளிர் சுய உதவிக் குழுத் தலைவர் ஆகியோரும் மேற்கண்ட குழுக்களில் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

இவர்கள் அனைவரும் வட்டார வளர்ச்சி அலுவலரின் வழங்கல் பதிவேடு, ஊராட்சி செயலரின் இருப்புப் பதிவேடு, ஊராட்சி விளையாட்டுக் குழு உறுப்பினர் பதிவேடு, ஊராட்சி செயலரின் வழங்கல் பதிவேடு ஆகிய பதிவேடுகளைப் பராமரித்து, கண்காணிக்க வேண்டும்.

விளையாட்டு வலிமையை மட்டும் தராது. ஊருக்குள் ஒற்றுமையையும் வளர்க்கும். அதற்கு இந்த ’கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம்’ நல்வித்தாக அமையும்..!

...சாதனை தொடரும்



### டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தில், என்னவெல்லாம் உள்ளன?

(1) கிரிக்கெட் மட்டை. (2) பேட்டிங் கிளவுஸ். (3) விக்கெட் கீப்பிங் கிளவுஸ். (4) பேட்டிங் லெக் கார்டு. (5) ஸ்டம்புகள். (6) அப்டோமினல் கார்டு. (7) கிரிக்கெட் பயிற்சி பந்துகள். (8) கிரிக்கெட் உபகரணப் பை. (9) ஹெல்மெட். (10) இதர பொருட்களை வைத்துக்கொள்ள ஒரு பை. (11) வாலிபால். (12) வாலிபால் வலை. (13) காற்றடிக்கும் பம்பு. (14) கால்பந்து. (15) கோல்கீப்பர் கிளவுஸ். (16) எறிபந்து. (17) எறிபந்து வலை. (18) டம்பெல்ஸ் செட். (2.5, 5, 7.5 கிலோ). (19) டென்னிகாய்ட் ரிங். (20) ஸ்கிப்பிங் கயிறு. (21) கேரம் போர்டு. (22) கேரம் போர்டு ஸ்ட்ரைக்கர் மற்றும் காயின்கள். (23) கேரம் போர்டு பவுடர். (24) சிலம்பம் குச்சிகள். (25) செஸ் போர்டு மற்றும் காயின்கள். (26) நீ கேப். (முழங்கால் கேப்) (27) பிளாஸ்டிக் விசில். (28) அளவெடுக்கும் டேப் (50 மீட்டர்). (29) கோன்ஸ் செட். (30) விளையாட்டுப் பயிற்சிகளுக்கான ஆடைகள். (31) இறகுப் பந்து ராக்கெட். (32) இறகுப் பந்துகள். (33) தொப்பிகள்.

### ஜெயமோகனுக்கும் உண்மைக்கும் துளி அளவாவது சம்பந்தம் உண்டா?

அண்மையில் (பிப்.27, 2024) எழுத்தாளர் ஜெயமோகன் அவரது வலைத்தளத்தில் “தமிழில் தத்துவம் உண்டா?” என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் (பொய்யுரையில்)

“இந்திய தொல்நூல்களெல்லாம் 18–ஆம் நூற்றாண்டில் ஜெர்மானிய மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டன” என்று கூச்சமில்லாமல் எழுதுகின்றார். அப்படி அவரால் குறிப்பிடப்படுகின்ற தொல்நூல்களில் ஒன்றுகூட 18–ஆம் நூற்றாண்டில் ஜெர்மனிய மொழியில் மொழியாக்கம் செய்யப்படவில்லை.

ஜெயமோகனைப் பற்றி நான் முன்பு ஒரு தடவை எழுதியுள்ள கட்டுரையில், “இவர் தப்பிலும் அடிப்பார், தவிலிலும் அடிப்பார், கிழிந்துவிட்டால், தச்சுக்கிட்டும் அடிப்பார்” என்று இவருடைய குணத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன்.

இத்துறையில் ஈடுபட்டு எழுதி வருகின்ற உலக அறிஞர்கள் எவரும் 18–ஆம் நூற்றாண்டில் ஜெர்மனி மொழியில் அவ்வாறான நூல்களை வெளியிட்டதில்லை.

இவ்வாறு உலக அறிஞர்களே துளி கூட அறியாத இத்தகைய உலக ‘பேருண்மையைக்’ கண்டுபிடித்த ஜெயமோகன் தன்னுடைய அரிய கண்டுபிடிப்பின் வாயிலாகத் தெரிந்த ‘ஜெர்மானிய நூல்கள்’ சிலவற்றின் பெயர்களையாவது வெளியிட வேண்டும். அவ்வாறு அவர் அந்நூல்களின் பெயர்களை வெளியிட்டுவிட்டால், ஜெயமோகன் உண்மையானவர்தான் என்று தமிழ் உலகம் நம்பும்.

–ஆய்வாளர் பொ.வேல்சாமி
ஃபேஸ்புக் பதிவு

### ஃப்ளாஷ்பேக்



இளங்கோவன்



**பொதுக் கூட்டத்துக்குப் பாராட்டு!**

1993-ஆம் ஆண்டு கழகம் நெருக்கடியான சூழலைச் சந்தித்த வேளையில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்களை அழைத்து கம்பத்தில் பொதுக்கூட்டம் நடத்தினோம். கூட்டத்தில், பங்கேற்க வருகை தந்த போது என்னுடைய இல்லத்தில் சிறிது நேரம் ஓய்வெடுத்துவிட்டுச் சென்றார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இப்படியான கூட்டத்தைக் கூட்டியமைக்கு என்னை அழைத்துப் பாராட்டினார்.

**–எஸ்.டி.டி.இளங்கோவன்,**
**முன்னாள் மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர்,**
**தேனி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்

**விடாமல் போராட்டம்!**

1938-ஆம் ஆண்டு இந்தி மொழி கட்டாயமாக்கப்பட்டபோது தமிழ்நாட்டில் அதற்கு எதிராக உறுதியான போராட்டங்கள் நடைபெற்றன. அதையடுத்து அனைத்துப் பள்ளிகளிலும் இந்தி மொழி என்று எடுக்கப்பட்ட முடிவு, 125 பள்ளிகளில் மட்டுமே செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. மேலும் முதல் மூன்று பாரங்கள் வரை மட்டுமே என்றும் தேர்வில் வெற்றிபெற வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்றும் மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆச்சாரியாரின் தந்திரங்களை அறிந்த பெரியார், சிறிதும் விட்டுக் கொடுக்காமல் போராட்டத்தைத் தீவிரமாக்கினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

407

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131